24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 104 | மாசி 27ஆம் நாள் | திங்கட்கிழமை | 11 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

## எரிபொருள் சூத்திர மீளாய்வு விலைகள் அதிகரிக்கலாம்

கொழும்பு, மார்ச் 11

எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைவாக இன்று திங்கட்கிழமை முதல் புதிய விலைப்பட்டியல் அறிவிக்கப்படவுள்ளது. எரிபொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பன்னாட்டுச் சந்தையில் எரிபொருள் விலையுடன் ஒப்பிட்டு நடைமுறைப்படுத்தப்படும் எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைவாக இந்த மாற்றம் இடம் பெறவுள்ளது. >> 05

## மன்னார் புதைகுழி எலும்புக்கூடுகள் அரை நூற்றாண்டுக்கு உட்பட்டதே

### தடயவியல் மருத்துவர்கள் ஆய்வு நடத்தவேண்டும் - பேராசிரியர் சுரேஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 11

மன்னார் மனிதப் புதைகுழி அரை நூற்றாண்டுக்கு உட்பட்டதே. இது தொடர்பான உண்மைகளை கண்டறிவதற்கு பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் பரிந்துரைக்கும் தடயவியல் மருத்துவர்களைக் கொண்டு வெளிப்படையான ஆய்வின் மூலமே உண்மைகளை வெளிக்கொண்டுவர முடியும். இவ்வாறு தடயவியல் நிபுணர் பேராசிரியர் செல்வ சுரேஸ் தெரிவித்துள்ளார். >> 07

# இலங்கைக்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பம்



### பரிந்துரைகளை நிறைவேற்றுவது அவசியம் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, மார்ச் 11

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள காட்டமான அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனதார வரவேற்கின்றது. ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் இலங்கை அரசுக்கு இறுதிச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இனியாவது அரசு ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். அதேவேளை, பன்னாட்டுச் சமூகத்தின் கண்காணிப்புக்கான காலத்தை நீடித்து ஜெனிவாவில் இம்முறை நிறைவேறவுள்ள புதிய தீர்மானத்துக்கும் அரசு இணை அனுசரணை வழங்கி அதனையும் செயற்படுத்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். >> 05

## எதியோப்பா வானூர்தி விபத்து 157 பேர் சாவு

கொழும்பு, மார்ச் 11

எதியோப்பியாவில் இருந்து கென்ய தலைநகர் நைரோபி நோக்கிச் சென்ற எதியோப்பின் ஏர்லைன்ஸ் வானூர்தி விபத்தில் சிக்கியது. இதில் பயணித்த 149 பயணிகள், 8 ஊழியர்கள் என்று மொத்தம் 157 பேரும் உயிரிழந்துவிட்டதாகச் >> 05

## மன்னாரில் 30ஆம் திகதி ஓ.எம்.பி. கிளை திறப்பு

மன்னார், மார்ச் 11

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் வடக்குக்கான முதலாவது கிளை எதிர்வரும் 30ஆம் திகதி மன்னாரில் திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2ஆம் >> 06

## ஐ.நா. ஆணையாளரின் அறிக்கைக்கு அரச உயர்பீடம் ஆராய்ந்து பதிலளிக்கும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

இல்ங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை எமது நாட்டுக்குச் சவால் மிக்கது. இது தொடர்பில் அரச உயர்பீடம் ஒன்றுகூடி தமது நிலைப்பாட்டை விரைவில் அறிவிக்கும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'எமது உத்தியோகபூர்வ நிலைப்பாடு ஜெனிவாவிலும் வைத்து அறிவிக்கப்படும். இலங்கை தொடர்பில் இம்முறையும் >> 05



## வெப்பம் மே வரை தொடரும்

நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பத்துடனான கால நிலை மே மாதம் வரையில் நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. வடக்கு. >> 06

## சவேந்திர சில்வா நியமனம் ஐ.நா. ஆணையர் கண்டிப்பு

கொழும்பு, மார்ச் 11

இலங்கையின் இராணுவ தலைமை அதிகாரியாக, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமைக்கு, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பசெலெட் >> 06

## போர்க்குற்றச்சாட்டு ஏன் சுமத்துகிறார்கள்? உண்மையைக் கண்டறியும் ஆய்வு நடத்தவுள்ளதாம் இலங்கை ராணுவம்

கொழும்பு, மார்ச் 11

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக இராணுவம் உள்ளக விசாரணைகளை நடத்தாது. அதற்குப் பதிலாக, இல்ங்கை இராணுவம் மீது எதற்காகப் போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன என்ற காரணத்தை >> 05

## ஐ.நா. மேற்பார்வை இல்லாவிடின் மந்த கதியில் நடக்கும் விடயங்களும் நடக்காது

### கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

முல்லைத்தீவு, மார்ச் 11

இலங்கை மீது பன்னாட்டு மேற்பார்வை தொடர்ந்திருக்கவேண்டும். அதனைக் கைவிட முடியாது. இது எங்களால் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவுகள் மந்தகதியில் நடப்பதாக இருக்கலாம். பன்னாட்டு மேற்பார்வையும் இல்லாமல் போய்விட்டால், இலங்கை அரசு எதுவுமே செய்யாமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள்தான் அதிகம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட் >> 05

★பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவு
★வரவு - செலவுத் திட்டம்

## அடியோடு இவற்றை எதிர்ப்பதற்கு கூட்டமைப்பு கைகோர்க்கவேண்டும்

### யாழ்ப்பாண மண்ணில் வைத்து ஜே.வி.பி. பகிரங்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு அதைவிட மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அரசு கொண்டு வரவுள்ளது. அதனை எதிர்க்கவேண்டும். மக்களுக்கு பயனில்லாத வரவு - செலவுத் திட்டத் >> 07

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## மிதுன ராசி அன்பர்களே!

*13.2.2019 முதல் 31.8.2020 வரை கலகலப்பான பேச்சும் துடிப்பும் மிகுந்த உங்களுக்கு இந்த ராகு, கேது சஞ்சாரம் மாறுபட்ட பலன்களை அருளப் போகிறார்கள். தெய்வப்பலம் கைகூடும்.*



**ராகு பகவான்
அருளும் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்கு இரண்டாவது வீட்டில் உட்கார்ந்துகொண்டு மனப் போராட்டங்களையும், வீண் அலைச்சலையும், காரியத் தடைகளையும் கொடுத்து வந்த ராகுபகவான், இப்போது உங்கள் ராசிக்குள்ளேயே வந்து அமர்கிறார். ஆகவே, உங்கள் பேச்சில் இனி முதிர்ச்சி தெரியும். உங்களைச் சிலர் அவமதித்துப் பேசினாலும் அதற்குத் தக்கபதிலடி வழங்குவீர்கள்.

குடும்பத்தில் அவ்வப்போது வாக்குவாதங்கள் வந்தாலும் ஒற்றுமை பாதிக்காது. பிள்ளைகளின் உடல்நிலை சீராகும். அவர்களின் வருங்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். படிப்பின் மீது இருந்த அலட்சியம் மாறும். இருந்தாலும் பிள்ளைகளின் நட்பு வட்டத்தைக் கண்காணியுங்கள். மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். அவரின் கல்யாணத்தை உறவினர்கள், நண்பர்கள் மெச்சும்படி நடத்துவீர்கள்.

பண வரவு அதிகரிக்கும் என்றாலும் சேமிக்க முடியாதபடி செலவினங்கள் வரும். வீண் மதிப்புக்காகப் பணத்தை வாரி இறைக்காதீர்கள். தலைசுற்றல், முன்கோபம் அதிகரிக்கும். உணர்ச்சி வேகத்தில் முடிவுகள் எடுக்கவேண்டாம். உடன்பிறந்தவர்கள் இனித் தேடி வந்து உதவுவார்கள். தாயாரின் உடல்நலம் சீராகும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். தெய்வ பலத்தால் பிரச்சினைகளைச் சமாளிக்கும் ஆற்றல் கிடைக்கும்.



சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் உண்டாகும். பூர்வீகச் சொத்தைக் கவனமாகக் கையாளுங்கள். பங்காளிப்பிரச்சினைகள் தலைதூக்கலாம். உறவினர்களில் சிலர், உங்களின் நிலைமையைப் புரிந்துகொள்ளாமல் உதவி கேட்டு வந்து நிற்பார்கள். வீண் பகை, மனக் கசப்புகள் வரும். வெளி உணவுகளைத் தவிர்த்து விடுங்கள். நேரம் கடந்து சாப்பிடும் வழக்கத்தையும் மாற்றிக் கொள்ளுங்கள்.

கன்னிப்பெண்களே! மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்காதீர்கள். பெற்றோரின் பேச்சுக்குச் செவி சாயுங்கள். தடைபட்ட கல்யாணம் கூடிவரும். இசை, நடனத்தில் சிறந்து விளங்குவீர்கள்.

அரசியல்வாதிகள் தலைமையை விமர்சித்துப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. உட்கட்சிப்பூசலில் தலையிடவேண்டாம்.

வியாபாரத்தில் மற்றவர்கள் சொல்கிறார்கள் என நம்பி, எந்தவொரு காரியத்திலும் ஈடுபட வேண்டாம். அதேபோல், பெரிய முதலீடுகளையும் இந்தக் காலகட்டத்தில் தவிர்க்கவும். இருப்பதை வைத்து லாபம் சம்பாதிக்கப் பாருங்கள். போட்டியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கடனைக் கனிவாகப்பேசிவசூலியுங்கள். வேலையாள்கள் அடிக்கடி விடுப்பில் சென்று உங்களைப் பதற்றமாக்குவார்கள்.

முக்கிய வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல், நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள் கெடுபிடி காட்டினாலும் அவர்களுடன் சச்சரவில் ஈடுபட வேண்டாம். அவர்களை விட்டுப்பிடிக்கவும். அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை, உடனுக்குடன் செலுத்திவிடுவது நல்லது. அந்த விடயத்தில் தாமதம் வேண்டாம்.

உத்தியோகத்தில், உங்களின் திறமையை அனைவரும் உணர்வார்கள். தடைப்பட்ட உரிமைகளும் சலுகைகளும் இனித் தாமதமின்றிக் கிடைக்கும். கணினித் துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும். கலைத்துறையினர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். பரிசு, பாராட்டுகள் குவியும்.

**கேது பகவான்
அருளும் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்கு எட்டில் உட்கார்ந்துகொண்டு நிம்மதி இல்லாமலும், சரியான தூக்கமில்லாமலும் துரத்தியதித்த கேது பகவான் இப்போது ராசிக்கு ஏழாவது வீட்டில் அடியெடுத்து வைக்கிறார். உங்கள் ஆழ்மனதில் இருந்த பயம் விலகும்.

எதிர்ப்புகள் அடங்கும். உங்களைக் குறை கூறியவர்கள் இனிப் புகழ்ந்து பேசுவார்கள். உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிரபலங்களின் அறிமுகமும் கிடைக்கும். பிள்ளைகளின் வருங்கால நலனுக்காக முக்கிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

உடன்பிறந்தவர்கள் ஒத்துழைப்பார்கள். சகோதரியின் திருமணத்தைக் கோலாகலமாக நடத்துவீர்கள். 7ஆம் வீட்டில் கேது அமர்வதால் கணவன், மனைவிக்குள் அவ்வப்போது காரசாரமான விவாதங்கள் வந்துபோகும். எனினும், ஒருவருக்கொருவர் சந்தேகப்படுவதைத் தவிர்க்கவும். அந்தரங்க விடயங்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

வியாபாரத்தில் போட்ட முதலை எடுப்பதற்கே பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டி வரும். பங்குதாரர்களுடன் கருத்துமோதல்கள் வந்து நீங்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். வேலையாள்களிடம் தொழில் இரகசியங்களை வெளியிடவேண்டாம். உத்தியோகத்தில் பதவி உயரும். மேலதிகாரியை பகைக்கவேண்டாம். எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் நேர்ப்பாதையில் செல்வது நல்லது.

இந்த ராகு, கேதுப் பெயர்ச்சி, கவலைகளிலிருந்து உங்களை விடுவிப்பதுடன், எதார்த்தமான முடிவுகளால் முன்னேற வைப்பதாக அமையும். உங்களுக்குப் பெருமாள் வழிபாடு துணை சேர்க்கும். எதிர்காலம் சிறக்க, திருவோண விரதம் இருந்து பலன் பெறுங்கள்.

(தொடரும்)

# கடவுள் பக்தி என்றால் என்ன?



பூலோகத்தில் செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவரும், செல்வந்தர் ஒருவரும் ஒரே பகுதியில் வசித்தனர். செருப்புத் தொழிலாளி தினமும் தான் செருப்புக் கடையின் ஓரத்தில் பெருமாள் படம் ஒன்றை வைத்து அதை வணங்கி வந்தார்.

செல்வம் இல்லாவிட்டாலும் சந்தோசமும் மன அமைதியுடனும் இருந்தார். செல்வந்தரோ தினமும் காலையில் குளித்துவிட்டு, பல மணி நேரம் பூசை புனஸ்காரம் எல்லாம் செய்வார். பல தலைமுறைக்கு காணும் செல்வம் இருந்தும் நிம்மதியின்றி வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் நாரத முனிவர் விஷ்ணுவைப் பார்த்து "அந்தச் செல்வந்தர் மிகுந்த பக்திமானாக இருக்கிறார்; தினமும் உங்களுக்குப் பல மணி நேரம் பூசை எல்லாம் செய்கிறார். அவர் நிம்மதியாய் வாழ, ஏதாவது செய்யக்கூடாதா?" என்றார்.

விஷ்ணு அதற்குச் சம்மதித்துவிட்டு நாரதரை பூலோகத்துக்கு அனுப்பினார். போகும்போது நாரதரைப் பார்த்து, "நீங்கள் கீழே சென்று, நான் நாராயணனிடமிருந்து வருகிறேன், என்று செல்வந்தரிடம் சொல்லுங்கள்.

அவர் தற்பொழுது நாராயணன் என்ன செய்து கொண்டு இருக்கிறார்? என்று கேட்பார். அதற்கு நீங்கள் நாராயணன் தற்போது ஓர் ஊசித் துளையூடாக வழியாக யானையை நுழைத்துக்கொண்டு இருக்கிறார் என்று பதில்சொல்லுங்கள்" என்று சொல்லி அனுப்பினார்.

"அப்படியே அந்தச் செருப்பு தைக்கும் தொழிலாளியையும் போய்ப் பார்த்து விட்டுவந்துவிடுங்கள்" என்றுசொல்லி அனுப்பினார் விஷ்ணு.

நாரதர் முதலில் அந்தச் செல்வந்தரின் வீட்டுக்கு சென்றார். பூசை எல்லாம் முடித்துவிட்டு வந்த செல்வந்தர், நாரதரிடம், "நீங்கள் யார்?" என்று கேட்க, நாரதர் தான் நாராயணனிடமிருந்து வருவதாகச் சொல்கிறார்.

அதற்கு அந்தச் செல்வந்தர் "தற்போது நாராயணன் என்ன செய்துகொண்டு இருக்கிறார்?" என்று கேட்க, நாரதரும், நாராயணன் ஓர் ஊசித் துளையூடாக யானையை நுழைத்துக்கொண்டு இருக்கிறார் என்றார். அதற்கு அந்த செல்வந்தர் "அது எப்படி முடியும்? இது என்ன நடக்கிற காரியமா?" என்று கேட்டார்.

நாரதர் அடுத்து அந்தச் செருப்புத் தைக்கும் தொழிலாளியைப் பார்க்கச் சென்றார். அவரிடமும் இதே சம்பாஷணை நடைபெற்றது. ஆனால் கடைசிப் பதிலுக்கு அந்தச் செருப்புத் தைக்கும் தொழிலாளி, "இதில் என்ன விந்தை? ஒரு பெரிய ஆலமரத்தைச் சின்ன விதையில் அடக்கியவர், பிரபஞ்சத்தை தன் வாயில் காண்பித்தவர், அவருக்கு யானையை ஊசியில் நுழைப்பது என்ன பெரிய விடயமா?" என்று பதில் சொன்னார்.

அவர்கள் இருவரும் சொன்ன பதிலை நாராயணனிடம் வந்து சொன்னார் நாரதர். கடவுள் பக்தி என்பது, பூசை, புனஸ்காரங்கள் செய்வது மட்டுமில்லை.

இறைவனின் பாதத்தைப் பூரண நம்பிக்கையுடன், நீயே சரணம் என்று பற்றுவதே உண்மையான பக்தி இப்பொழுது தெரிகிறதா? ஏழையின் நிம்மதிக்கு காரணம் என்று பதிலளித்தார் நாராயணன்.

**ES Printers**

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

esprintersjaffna@gmail.com

021 492 7471, 021 492 7472



**நாஹா மருத்துவ நிலையம்**

எலும்புகள் செயலிழந்திருக்கும் வாதம், பாரிச வாதம், முழங்கால் வாதம், மூட்டுக்கள் பாதிப்பு, தீராத ஆஸ்மா, விறைப்பு, சிறுநீரகம் சார் கால்வீக்கம் சிறப்பு சிகிச்சை

வங்கி முன்லேன்

சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு), மானிப்பாய். 077 321 2740




# மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

## விளம்பி வருஷ பங்குனித் திங்கள் உற்சவம்

**18.03.2019, 25.03.2019, 01.04.2019, 08.04.2019**

ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளன. பங்குனித் திங்கள் உற்சவம் அதிகாலை 5.30 மணிக்கு உஷத் காலப்பூசையுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பூஜைகள் அபிஷேகம் உற்சவங்கள் இடம் பெறும்.

### உற்சவகால கடைகள் பற்றிய அறிவித்தல்

**16.03.2019 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு**

கடைகள் வழங்கப்படும். கடைகளை எடுப்பவர்கள் முழுப் பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

### முக்கிய அறிவித்தல்

அம்பாள் ஆலயத்தின் திருப்பணிகளுக்காகவோ, உற்சவங்களுக்காகவோ, அன்னதானத்துக்காகவோ நிதி, பொருள் சேகரிப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எனவே அடியார்கள் ஆலய அலுவலகத்தில் மட்டும் கையளித்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

**ஆலய இணையதள முகவரி:**

www.madduvilpanriththalaichchiamman.com

**021 373 5259**

மட்டுவில்,
சாவகச்சேரி.

(cs.23882 (13.17)

சிவபஞ்சாட்சரம்
தர்மகர்த்தா.

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 10 . 1935

இறப்பு 08 . 03 . 2019

### திருமதி தில்லைநாயகி மயில்வாகனம்

பலாங்கொடையைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாயகி மயில்வாகனம் 08.03.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - இராசம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், மனோகரன் (லண்டன்), மனோசீலன் (சுவிஸ்), மனோவர்ணி (சுவிஸ்), மனோகரி, மனோரூபி, மனோவர்ணன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் சந்திரசேகரம், நாகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜசிங்கம் மற்றும் நாகேந்திரன், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், குகனேசன் மற்றும் மேகநாதன், ஜீவா, வனஜா, ரஜனிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிந்துர்ஷன், வினோஷன்,தனீஷன், பவலக்ஷன், கிஷாலினி, சதுர்ஷிகா, சிதுர்ஷிகா, கஜலக்ஷன்,தினேஷன், சுதர்ஷன்,சபிஷன், பிரகலாதன், றினுஜா, றிஷிந்த், அர்ஷா, நவீத்தன், கினோத்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2019) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் (வடலியடைப்பு) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காயா வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

(C5/23198)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

**0217911735**

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை தியாகராசா



பிறப்பு 26.03.1941 இறப்பு 08.03.2019

யாழ். மிருசுவில் உசனைப் பிறப்பிட மாகவும் குமுழமுனை முள்ளியவளையைவசிப்பிடமாகவும்தற்போதுகுழுக்கண்டிவீதி, கட்டப்பிராயில்வசித்து வந்தவருமாகிய வேலுப்பிள்ளை தியாகராசா (ஓய்வுபெற்ற அதிபர்) கடந்த (08.03.2019) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்க ளான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சுபாஜினி (பிரான்ஸ்), சுதாஜினி (பிரான்ஸ்), சுதன் (கனடா), சுபாஸ் (வைத்தியர்- யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் உதய குமார் (பிரான்ஸ்), கணேசமூர்த்தி (பிரான்ஸ்), நந்தரூபி (கனடா), அனித்தா (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷனன், பௌசிகன், யசிகன், அவினாஷ், அபிஷ்னா, ஹரிணிகா, மதுஷிகா ஆகியோரின் அன்புப்பேரனும் Dr. பரமநாதன் (லண்டன்), கிருஸ்ணபிள்ளை (கனடா), சிவக்கொழுந்து (நீர்வேலி), இராசலட்சுமி (ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - கண்டாவளை), சிவமணி (பிரான்ஸ்), பாக்கியம் (கனடா), புஸ்பநாதன் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2019) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு குழுக்கண்டி வீதி, கட்டப்பிராயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0212215015,
077 853 2446

(cs.23921)

தகவல்:
குடும்பத்தினர்.

### ஆறுப்பிள்ளை தேவராசா (சங்கர்)

(ஓய்வு பெற்ற காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)



தோற்றம் 02.01.1955 மறைவு 09.03.2019

நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை தேவராசா 09.03.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், மகேஸ்வரி (ஜெயா) அவர்களின் பாசமிகு கணவரும், வரப்பிரகாஸ் (பழைய மாணவன் யாழ். இந்துக்கல்லூரி உ/த 2016) அவர்களின் பாசமிகு அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, புவனேஸ்வரி, யோகராசா (குட்டி - லண்டன்), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரன், காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் பாலசசி (லண்டன்), சந்திரகுமார், நாகேஸ்வரி, நாகேந்திரம், காலஞ்சென்ற சிவகணேசதாசன் (பப்பாயர்) மற்றும் சர்வேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2019) திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் நகுலேஸ்வரா வீதி, கீரிமலையில் உள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.

தகவல்
மனைவி - ஜெயா
மகன் - பிரகாஸ்

(cs.23307) (13.17)

### வைத்திலிங்கம் புவனேந்திரன்

(சாமியண்ணை)



டச்வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் புவனேந்திரன் கடந்த (07.03.2019) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி லிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நடராசா - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற உதயகுமாரி மற்றும் உதயகுமார் (கனடா), தயாழினி (ஆசிரியர், யா/உடுவில் அ.மி.த.க பாடசாலை), தர்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதய குமார் (கனடா), கல்யாணி, நவதாசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், காரைநகர் பிரதேச செயலகம்), மயூந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஷஜீவன், அக் ஷனா, பிரிஷா, பிரஜித், மபிஷன், யுகாதிரா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், தம்பிராசா, செல்லையா, அழகரத்தினம் மற்றும் அன்னம்மா, விஜயசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பூமணி, பராசக்தி, நாகேஸ்வரி, பரமேஸ், இரத்தினம் மற்றும் சறோஜினிதேவி, வைரவநாதன், பரமேஸ்வரி, செல்வலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுந்தரவல்லி, அமுதவல்லி, காலஞ்சென்றவர்களான பரமானந்தவல்லி, சித்தார்த்தன், புவனேஸ்வரன் மற்றும் அருட்செல்வன், பாஸ்கரன் ஆகியோரின்சிறியதந்தையாரும்விஜிதா,சுதர்சன்ஆகியோரின்பெரியப்பாவும்விக்கினேஸ்வரி, விக்னேஸ் வரன்,தேவகி ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2019) திங்கட்கிழமை காலை 9.00மணியள்வில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச் வீதி,உடுவில்

(cs.23906)

தகவல்: குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 05 . 1984



மறைவு 03 . 03 . 2017

"சின்னத்துரை சிற்பாலயம்" உரிமையாளர் நந்தகுமாரின் மனைவி

## திருமதி லக்ஷி நந்தகுமார்

திதி - மாசிமாத பூர்வபட்ச பஞ்சமி (11.03.2019 திங்கட்கிழமை)

**எங்கிருக்கிறாய் அன்னையே....!**

ஆண்டுகள் இரண்டு ஆனதென்று அறிவு எமக்கு கூறுகிறது
உண்மைதானா இதுவென்று எம் உள்ளுணர்வு மறுக்கிறது
கண்மூடித்திறப்பதற்குள் எல்லாம் கனவு போல்தான் தெரிகிறது
கனவாகி விடாதா என்றும் எம் நனவு மனம் ஏங்குகிறது
மறக்கவும் முடியவில்லை உன்னை- மனதில் மறைக்கவும் முடியவில்லை

தொடர்கிறது நம் போராட்டம் உன் நினைவு விழுதுகளையும் சுமந்தபடி
விழுதுகள் விருட்சமாகி உன் நிழலை நியப்படுத்தும்
மனங்கலங்காதே நீயும் அமைதிகொள் படைத்தவன் படி அளப்பான் என்றே...

"சின்னத்துரை சிற்பாலயம்"
118, சிவப்பிரகாசம் வீதி
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 677 9314

(CS/23851)(11.17)

# நெஞ்சை விட்டகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 26 . 01 . 1948



ஆண்டவன் அடியில் 20 . 02 . 2018

## திருமதி லலிதாதேவி (குஞ்சு) பாலசிங்கம்

திதி: 11.03.2019


எங்கள் குலவிளக்கே பாசத்தின் பிறப்பிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் பண்பின் பிறப்பிடமாய்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகை முகம் தோன்ற
கண்கள் நனைகிறதே கண்ணீர் சொரிகிறதே
ஆண்டு ஒன்று ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாது
அம்மா என்றழைக்க நீங்கள் இல்லையே
அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய
நெஞ்சுருகி நித்தமும் வேண்டி நிற்கும்.

C 18 G 1 சொய்சாபுரம்,
மொறட்டுவ,
011 262 4487, 077 435 1612

அன்புள்ள கணவர்
(முன்னாள் ரஜினி கிறீம் ஹவுஸ் - யாழ். வவுனியா)
மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 17 . 07 . 1957



விண்ணில் 09 . 02 . 2019

## அமரர் எம்.ஐ.கிறிஸ்ரி றமீன்


(பிரபல கட்டட ஒப்பந்தகாரரும், பிரதான வீதி தனு எலக்ரிக்கல்ஸ் அன்ஹாட்வெயார்,
கொழும்புத்துறை சுயந்தன் மரக்காலை என்பவற்றின் உரிமையாளரும்)

ஆலவிருட்சம் போன்ற உம் பாசநிழலில்
கோலமுற சீருடனே வாழவைத்த தெய்வமே !
சீலமிகு அன்புக்குள் எம்மை கட்டிவைத்தீர்
ஞாலமே போற்றும் சிறப்புக்கள் சேர்ந்த வேளை
காலச் சுழல் காற்று இதயத்தை தாக்கியதோ ?
ஓலமிட்டழுகின்றோம் ஒருவார்த்தை பேசாயோ ?
உம் வெற்றிடத்தை நிரப்ப யாருண்டு எமக்கு
மாண்டுவிட்டீர்கள் என்பதை ஏற்கவில்லை நெஞ்சம்
மீண்டும் எம் மனையில் பிறந்திட வேண்டி
ஆண்டவனிடம் ஆன்ம அமைதிக்காய் செபிக்கின்றோம்.

28/2 ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை.

சோகச் சுனாமியில் சிக்குண்ட
குடும்பத்தினர்.

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் உயர்திரு. வயிரமுத்து குலசிங்கம்

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை)

மலர்வு 15.03.1939

அமரத்துவம் 11.03.2009

அன்பின் ஒளிவிளக்காய் பாசத்தின் பிறப்பிடமாய்
இன்முகம் காட்டி எம்மை எல்லாம் வாழ வைத்த
அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பத்தாகி விட்டன. உங்கள் பிரிவின் துயரை
எங்களால் ஏற்க முடியவில்லை ஐயா

கண்ணை இமை காப்பது போல் எம்மை எல்லாம்
காத்து வந்தீர்கள் இப்போது பட்ட மரம் போல்
வலுவிழந்து தவிக்கின்றோம் ஐயா, எப்போதும் உங்கள்
நினைவலைகளால் தவித்து நிற்கும்

Mrs.S.Kulasingam
London.
11.03.2019

மனைவி, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனிமார்,
பெறாமக்கள்

## இலங்கைக்கு...

இவ்வாறு எச்சரிக்கையுடன் வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்லே பச்செலெட் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் 'உதயன் பத்திரிகையிடம்' நேற்றிரவு கருத்துத் தெரிவிக்கும்போதே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளைச் செயற்படுத்த இலங்கை அரசு ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மட்டும் எடுத்தது. அதில் முன்னேற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. பல பரிந்துரைகள் இன்னமும் செயற்படுத்தப்படவில்லை. இதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடுமையாகக் கண்டித்துள்ளார். இலங்கைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நீதியைக் கோரி நிற்கும் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம்.

அதேவேளை, இலங்கை அரசுக்கும் எச்சரிக்கையுடன் ஒன்றைக்கூறிவைக்க விரும்புகின்றோம். அதாவது, கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது இனியாவது அரசு செய்ய வேண்டியதைச் செய்யட்டும். இல்லையேல் பாரதூரமான பின்விளைவுகளை அரசு சந்திக்க வேண்டி வரும் என்றார். (ஒ.5,22)

## எரிபொருள்...

கடந்த மாதம் விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் ஒக்ரேன் 92 ரக பெற்றோல் 6 ரூபாவினாலும், ஒக்ரேன் 95 ரக பெற்றோல் 5 ரூபாவினாலும், ஒட்டோ டீசல் 4 ரூபாவினாலும், சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 8 ரூபாவினாலும், அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## ஐ.நா. ..

ஐ.நாவில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்துக்கு நாம் இணை அனுசரணை வழங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய இலங்கைக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை, போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் சாத்தியமான விசாரணை, ஐ.நா. ஆணையாளர் அலுவலகம் இலங்கையில் அமைக்கப்படுதல், இலங்கையைத் தொடர்ந்தும் மனித உரிமைகள் ஆணைக்குழு நிகழ்ச்சி நிரலுக்குள் வைத்திருத்தல் ஆகிய பரிந்துரைகளை உள்ளடக்கி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்லே பச்செலெட் காட்டமான அறிக்கையைக் கடந்த வெள்ளிக்கிழமை விடுத்திருந்தார்.

இது தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் அறிக்கையை நான் உன்னிப்பாகப் பார்த்தேன். அதில் எமது நாட்டுக்கு சவால்மிக்க பல விடயங்கள் உள்ளன. இது தொடர்பில் உடன் கருத்துத் தெரிவிக்க முடியாது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் அரச உயர்பீடம் ஒன்றுகூடி விரிவாக ஆராயும். அரசின் நிலைப்பாட்டை எமது உயர்பீடம் விரைவில் அறிவிக்கும். எமது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டு ஜெனிவாவிலும் வைத்து அறிவிக்கப்படும்.

இலங்கை தொடர்பில் கடந்த முறை ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கினோம். நாட்டின் நலன் கருதி இதனைச் செய்தோம். இம்முறையும் ஐ.நாவில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்துக்கு நாம் இணை அனுசரணை வழங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். ஐ.நாவையோ அல்லது பன்னாட்டுச் சமூகத்தையோ பகைத்துக் கொண்டு எம்மால் செயற்பட முடியாது. அதற்காக நாம் நாட்டைக் காட்டிக்கொடுக்கின்றோம் என்று எவரும் நினைக்கக்கூடாது - என்றார். (ஒ.5,22)

## மந்த...

டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் வடகிழக்கு அபிவிருத்தி நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனூடாக பலவிதமான மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுத்து நாங்கள் மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவதற்கு முயற்சிக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட அறிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம். இலங்கை அரசு பொறுப்புக் கூறல் விடயத்தை நிறைவேற்றியாகவேண்டும். அதனைத் தட்டிக் கழிக்க முடியாது. பல விடயங்களை இலங்கை அரசு செய்யவில்லை என்று காரசாரமாக அந்த அறிக்கை வெளிவந்துள்ளது.

இலங்கை தொடர்பில் பிரிட்டன் தீர்மானம் முன்வைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. அந்தத் தீர்மானத்தில் கால அட்டவணையைச் சேர்த்துக் கொள்ளுமாறு இந்த நாடுகளிடத்தில் கேட்டுக் கொண்டுள்ளோம். பல விடயங்களைச் செய்யாமல் தவிர்ப்பதற்கு இலங்கை இழுத்தடிக்கின்றது. எனவே கால அட்டவணையை நிர்ணயித்து அவற்றைச் செய்யச் செய்யவேண்டும்.

இப்பொழுது எங்கள் கையில் இருக்கின்ற ஒரே ஒரு பொறிமுறையையும் நாங்கள் இந்தத் தடவையுடன் கைவிட்டால், இலங்கை அரசு பொறுப்பேற்ற விடயங்கள் சம்பந்தமாக மேற்பார்வை செய்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு ஆணை இல்லாமல் போய்விடும். எனவே இந்த ஆண்டு தீர்மானம் நிறைவேற்றுவதன் ஊடாகவே பன்னாட்டு மேற்பார்வை நீடிக்கப்பட முடியும்.

மக்களைத் திசை திருப்பித் தவறான வழிகாட்டல் கொடுக்கின்ற தரப்புக்களின் பேச்சுக்களைக் கேட்கக் கூடாது. மனித உரிமைகள் சபைக்கு வெளியில் இருக்கின்ற வேறு பொறிமுறைகளை நாங்கள் கையாளலாம். பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கும் செல்லலாம். எங்கள் கையில் இல்லாத ஒன்றைச் செய்யுமாறு கூறிக் கொண்டு, இருக்கின்ற விடயத்தைக் கைவிடச் சொல்லுவது நியாயமில்லை - என்றார். (ஒ.5,ரி3)

## எதியோப்பா...

செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை உள்ளூர் நேரப்படி 8.38 மணிக்கு அடிஸ் அபாபா நகரில் இருந்து எதியோப்பியா வானூர்தி புறப்பட்டது. நகரில் இருந்து 50 கி.மீ தொலைவில் உள்ள பிசோப்டு பகுதிக்குப்பின் வானூர்தியின் சிக்னல் கிடைக்கவில்லை என்பதால், இங்கு விபத்து நடந்துள்ளது. மீட்புப்பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. விபத்தில் உயிரோடு இருப்பவர்கள் குறித்த எந்தவிதமான உறுதியான தகவலும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## உண்மையைக்...

கண்டறிவதற்காக, உண்மையைக் கண்டறியும் ஆய்வு ஒன்று நடத்தப்படும். இவ்வாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டதற்கு கடுமையான கவலை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக விசாரணைகளை நடத்த இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளது. (ஒ.5)

PVC பைப் செல்வ், PVC பிற்றிங்ஸ் செல்வ்
ஆகியன விற்பனைக்குண்டு





இல.23/1, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
## பகிரங்க பிஸ்கால் ஏலவிற்பனை

1994 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கடன் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கக் கடன் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான வழக்கு.

தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி
இல.40. நவம் மாவத்தை.
கொழும்பு – 02.
கிளை:
இல.30. கே.கே.எஸ் வீதி
சுன்னாகம்.

**வழக்காளி.**

வழக்கு இலக்கம் : MDR/433/17 **எதிர்.**
வகை : பணம்.
பெறுமதி : ரூபா 52.50.000/=

1. EUT (தனியார்) லிமிட்டட்.
   சுன்னாகம் கிழக்கு. சுன்னாகம்.
2. வேலுப்பிள்ளை சிறிஸ்கந்தராஜா
   சுன்னாகம் கிழக்கு. சுன்னாகம்.
3. சிறிஸ்கந்தராஜா ராஜகலா
   சுன்னாகம் கிழக்கு. சுன்னாகம்.
4. சிறிஸ்கந்தராஜா சிந்துஜன்.
   சுன்னாகம் கிழக்கு. சுன்னாகம்.

**எதிராளிகள்.**

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய திரு.N.K.கஜரூபன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும். எனக்களிக்கப்பட்ட இவ் விற்பனை அதிகாரத்திற்கு அமைவாகவும். இவ்விற்பனையை நடத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தைக் குறித்த சுன்னாகம் கிராமத்திலுள்ள "கப்பம்புலம்" என்று அழைக்கப்படும் ஆதனத்தில் நின்று 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

**ஆதன இடாப்பு – 01**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவிலும். பிரதேசசபைப் பிரிவிலும் சுன்னாகம் கிழக்கு (J/197) கிராம சேவகர் பிரிவில் அமைந்ததும் வரிமதிப்புப் பிரிவு சுன்னாகத்தில் அமைந்ததும் சுன்னாகம் கிராமத்தில் கப்பம்புலம் என்றழைக்கப்படும் சுன்னாகம் கிழக்கு கந்தையா வீதியில் வரிமதிப்பு இடாப்பு இல. 01 இல் அமைந்த காணி. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். சிற்றம்பலம் அவர்களால் அளந்து முடிக்கப்பட்ட பட இல.2697 – 05.09.2010 இன்படி லொட் இல.01 இதன் விலாசம் நிலப்பரப்பு மூன்று குழி Three Lachchams V.C (03Lms V.C) இதன் எல்லைகள்

வடக்கு: 12 அடி அகலமுள்ள ஒழுங்கை மேற்படி பட இலக்கத்தின்படி லொட் இல.03
கிழக்கு: கந்தையா வீதி
தெற்கு : க.சுப்பிரமணியத்தின் வளவு
மேற்கு: இரண்டாவது ஆதனம் மேற்படி பட இலக்கத்தின்படி லொட் இல.02 இதுவுமிதனுட்பட்ட பயிர் பிரயோசனங்கள் சகலதும் இது யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் சுமைச் சீட்டு இல.H731/06 இல் பதியப்பட்டுள்ளது.

**ஆதன இடாப்பு – 02**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவிலும் பிரதேச சபை பிரிவிலும். சுன்னாகம் கிழக்கு (J/197) கிராம சேவர் பிரிவில் அமைந்ததும் வரிமதிப்புப் பிரிவு சுன்னாகத்தில் அமைந்ததும் சுன்னாகம் கிராமத்தில் கப்பம்புலம் என்றழைக்கப்படும் சுன்னாகம் கிழக்கு கந்தையா வீதியில் வரிமதிப்பு இடாப்பு இல.01 இல் அமைந்த காணி இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம்.சிற்றம்பலம் அவர்களால் அளந்து முடிக்கப்பட்ட பட இல.2697 – 05.09.2010 இன்படி லொட் இல.02 இதன் விலாசம் ஒன்பது குழி (09 Kls) இதன் எல்லைகள்

வடக்கு: 12 அடி அகலமுள்ள ஒழுங்கை. மேற்படி பட இலக்கத்தின்படி லொட் இல.03
கிழக்கு: முதலாவது ஆதனம் மேற்படி பட இலக்கத்தின் படி லொட் இல.01
தெற்கு : க.சுப்பிரமணியத்தின் வளவு
மேற்கு: தவபாஸ்கரனின் மனைவி ஶ்ரீபிறிமாவின் வளவு இதுவுமிதனுட்பட்ட பயிர் பிரயோசனங்கள் சகலதும் இது யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் சுமைச் சீட்டு இல.H853/01 இல் பதியப்பட்டுள்ளது.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலில் ஒரு பங்கை ¼ உடன் அவ்விடத்தில் செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்) 1%
பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக் கோவையின் படி
விளம்பரச் செலவுகளும் பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்
விற்பனைக் கமிசன் 2½ %
விற்பனை ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின் படி)

**நீதிமன்றக் கட்டளைப்படி**

2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி

**பதிவாளர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் ஆளணி உதவியாளராகக் கடமையாற்றும் நடேசர் வரதயோகர் அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி செல்லம்மா நடேசர்**
**(இளைப்பாறிய ஆசிரியை)**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலாளரும் உத்தியோகத்தரும்*
*ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.*

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் தர்மலிங்கம் நிரஞ்சன்



தோற்றம்
13.11.1967

மறைவு
11.12.2018

அங்கமெலாம் சுமந்து பெற்ற
அன்னையின் மனம் மகிழ்ந்து தங்கமென
வளர்ந்து வந்த தங்கமனம் கொண்டவனே
நிரஞ்சனே! எங்கே என்று தேடும்
இணைபிரியா உறவுகளை விட்டு
எங்கே தான் சென்றாயோ?
எமதருமை உடன்பிறப்பே
அஞ்சாத நெஞ்சனாய் எங்கள்
அன்பு மாறாத மகனாக தந்தையாக
அண்ணனாக நண்பனாய் கொண்ட
கொள்கை இலட்சியத்தில்
கொள்கை மாறாத்தீரனாய் நின்று
வாழ்ந்த நினைவுகளை
நெஞ்சம் மறக்கும் முன்பே சென்றதெங்கே?
உடன்பிறப்பே தெய்வத்தின் திருவடிக்கோ...

மயிரிழையில் உயிர்தப்பி
வந்திருக்கக் கூடாதோ?
மயக்கமுற்று காலன் விட்டிருக்கக் கூடாதோ
வாழும் வழி தெரியாது வதைப்பட்டு
நிற்கின்றோம்

உயிர்பிரியும் வேளையிலும் அம்மாவை
அழைத்தாயோ. உதவிக்கரம் நீட்டி தங்கைகளை
அழைத்தாயோ. உன்னுயிர் தங்க மகனை அழைத்தாயோ

அண்ணா உங்களைத் தேடி எங்கள் கண்கள் களைத்ததடா
நீ நடந்த பாதைகளும் நீ படுத்த படுக்கைகளும் நீ விட்டுச் சென்ற
எத்தனையோ நினைவுகளும் எங்களைப் புரட்டி இதயங்களையும்
துளைத்து உங்கள் நினைவில் துடிக்குதையா
மாழும் துயரத்துக்கு மீட்சி உண்டோ கூறுங்கள் அண்ணா

அண்ணாவைத் தேடி கண்ணீரில் கரைந்தபடி
கவி வரிகள் சில எழுதி கங்கையிலே
விடுகின்றோம் எமதருமை உடன்பிறப்பே
என்றும் ஈசன் திருவடியில் இன்புற்று
வாழ்கவென்று இதயத்தின் நினைவுகளைக்
காணிக்கை ஆக்குகின்றோம்..

5/1, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 468 5770

ஆக்கம்:- ந. மஞ்சுளா (தங்கை)
த.கண்ணம்மா (தாய்),
பி.மதனசறோஜினி (தங்கை)

## மரணஅறிவித்தல்

## தங்கமுத்து தில்லையம்பலம்



சரசாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத் துறையை வதிவிடமாகவும் தற்போது மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட தங்கமுத்து தில்லையம்பலம் நேற்று ( 10.03.2019 ) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்புத் தங்கையும் விக்னேஸ்பரனானந்தன். காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி. நந்தகுமார் மற்றும் ஜெகதீஸ்வரி. சிவானந்தன். பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு அத்தையும் சர்மிளா. வைஸ்ணவி. டிலான். டெல்வின். டொனக் ஷன் ஜஸ்மின். டம்மியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மதுரனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 11.03.2019 ) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ( நீதிமன்றுக்கு அருகாமையில்) உள்ள துதி அந்தியகாலச் சேவை மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர் உறவினர் நண்பாகள்: அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு.**
**தகவல்:ஜெகதீஸ்வரி ஜீவானந்தன் (மருமகள்)**

**077 061 4389**

## ஈழத்துச் சிதம்பரத்தின் பெருந்திருவிழா

காரைநகர் மார்ச் 11

பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் வருடாந்த பங்குனிப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் சிறப்பு உற்சவங்களாக எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணிக்கு கைலாச வாகன உற்சவமும், 18 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்கு பெரிய சப்பறத் திருவிழாவும், 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பஞ்சரத பவனியும், 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7மணிக்கு நடேசர் உற்சவமும் முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும், 21 அம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம் பெற உள்ளன.

உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் உள்ள அன்னதான மண்டபங்களில் அன்னதானம் இடம்பெறவுள்ளதுடன் யாழ்ப்பாண நகரிலிருந்து ஆலயம் வரை பேருந்து சேவைகள் இடம்பெறவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-250)

## *மன்னாரில்...*

திகதி மாத்தறையில் கிளை அலுவலகம் திறந்து வைக்கப்படமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,56)

## *சவேந்திர...*

கண்டனம் தெரிவித்துள்ளார்.
இலங்கை தொடர்பில் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
'மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக இருந்தவர். அவரது கட்டுப்பாட்டில் இருந்த படையினர், பன்னாட்டு மனித உரிமைகள் சட்டம் மற்றும் பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்களை மீறினார்கள் என்று. ஐ.நா. பொதுச்செயலர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையிலும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கையிலும், குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன' என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ,5)

## *வெப்பம்...*

கிழக்கு, வட மத்திய, வட மேல் மாகாணங்களில் வெப்பத்துடனான வானிலை நிலவும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ,5)

## வேலையாள் தேவை

பல்பொருள் வாணிபம் ஒன்றுக்கு வேலையாள் ஒருவர் தேவை. வயது எல்லை 18-25. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
**- 077 086 6384, 071 085 4440**
**தும்பளை வீதி, பருத்தித்துறை.**

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

# IELTS

- *Latest training materials. ( Book 12 )*
- *Skills development in all four categories.*
- *Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.*

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

## IELTS Life Skills

திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

**British Council'S IELTS Registration Centre**

கடந்த வருடமும் British Council இன் விருது பெற்ற IELTS பரீட்சைக்கு தனித்துவமான நிறுவனம்
புதிய நடைமுறைகள் பற்றி அறிய http://www.itdmi.com/ls

## Spoken English

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Sat, Sun 3.00 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:00 p.m. | Sat, Sun 11.30 a.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun 11 a.m |

பதிவுகளினை முற்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

DMI COMPUTER EDUCATION

Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-234 1970 | Tel.: 021-228 5659

## அடியோடு...

தையும் தோற்கடிக்க வேண்டும். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களுடன் கைகோர்க்க வேண்டும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடிப்படை உரிமைகளை மறுக்கும் வகையில் புதிய, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு உருவாகியுள்ளது. மனித உரிமைகளுக்கு பாதகமான விடயங்கள் புதிய வரைவில் உள்ளன. இது தொடர்பில் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசு கண்டுகொள்வதாக இல்லை. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை நாடாளுமன்றில் நிறைவேற்ற அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லை. கூட்டமைப்பு ஆதரவு வழங்கினாலே நிறைவேற்ற முடியும். காட்டுமிராண்டித்தனமான சட்டவரைவுக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்காமல் எங்களுடன் சேர்த்து எதிர்க்கவேண்டும்.

வரவு - செலவுத் திட்டத்தில் வெறும் ஆசை வார்த்தைகள்தான் கூறப்பட்டுள்ளன.

வடகிழக்கில் நிலையான அபிவிருத்தி திட்டங்கள் எவையும் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. தமிழ் மக்களுக்கும், நாட்டு மக்களும் பலனற்ற வரவு செலவுத் திட்டத்தை கூட்டமைப்பு எங்களுடன் சேர்ந்து எதிர்க்க வேண்டும். புதிய அரசமைப்பு விவகாரத்தை கையில் வைத்து ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை ஏமாற்றி வருகின்றார். சம்பந்தன் பல விடயங்களைக் கூறுகின்றார். ஆனால் ரணில் தந்திரமாக ஏமாற்றி வருகின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எங்கள் கட்சியுடன் கைகோர்த்து அரசை எதிர்க்க அழைப்பு விடுகின்றேன் என்றார். (ஒ.5.8.106)

## மன்னார்...

மன்னார் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் அமெரிக்காவுக்கு கார்பன் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. அதன் முடிவுகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன. அது கி.பி. 1400 கி.பி. 1650 ஆம் ஆண்டு காலத்துக்குரியது என்று பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பில் செல்வ சுரேஸ் தெரிவித்ததாவது:

மனித எச்சங்கள் மண்ணின் தரம் தட்பவெப்ப சூழ்நிலைக்கு ஏற்ப அது பாதுகாக்கப்படும் காலம் வேறுபாடும். நான் நேரில் பார்த்த தடயவியல் மருத்துவர் என்ற ரீதியில் என்னால் அந்த ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்கு உட்பட்டதல்ல என்றும் அது அரை நூற்றாண்டுக்கு உட்பட்டவை என்றும் கூறமுடியும்.

இலங்கையில் இந்த ஆய்வை மேற்கொள்ளும் அளவுக்கு அனுபவமுள்ள தடயவியல் ஆய்வாளர்கள் இல்லை என்பது எனது கருத்து. பன்னாட்டு மனித உரிமை ஆணையகம் பரிந்துரைக்கும் தடயவியல் மருத்துவர்களை கொண்டு வெளிப்படையான ஆய்வின் மூலமே உண்மையை வெளிக்கொண்டுவர முடியும் - என்றார். (ஒ.5)


## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சின்னப்பிள்ளை

மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னப்பிள்ளை நேற்று (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் சகோதரியும் காலஞ்சென்ற தங்கராசா, பத்மாவதி, காலஞ்சென்ற நாகராசா, நடராசா (டென்மார்க்), திலகவதி (லண்டன்), சிவராசா, பாலச்சந்திரன் (லண்டன்), சறோஜி ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணி, காலஞ்சென்ற முத்துக்குமாரு, யோகேஸ்வரி, லீலாவதி, பரமானந்தம், ரேணுகா, மேகலா, கைலைநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2017) திங்கட்கிழமை மூளாய் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS23889)(11,17)

## மேல் நீதிமன்றம் வவுனியா
## கேள்வி அறிவித்தல்

வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் வவுனியா மேல் நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ.100/- ஐயும், மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூ.10000/- ஐயும் செலுத்தி 22.03.2019 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பமுடிவு திகதி 22.03.2019 பிற்பகல் 2 மணிவரை ஆகும். அன்றையதினம் சுமார் பிற்பகல் 3 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**R.கண்ணன்,**
**தவிசாளர்/மேல்நீதிமன்ற நீதிபதி,**
**மேல்நீதிமன்ற கேள்விச்சபை,**
**மேல்நீதிமன்றம், வவுனியா.**

(IN/9572)(11,17)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணக பிரவேசம்
20.06.1945



விண்ணக பிரவேசம்
11.03.2017

### திருமதி சத்தியலட்சுமி காங்கேயன்

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி சத்தியலட்சுமி காங்கேயன்
ஆண்டு இரண்டு ஆனாலும்
தங்கள் உயிரோட்டமான நினைவலைகளுடன் வாழும்
**கணவன், மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.**

(CS23889)(11,17)

## மரண அறிவித்தல்

பிறப்பு
30 . 12 . 1965



இயற்கை எய்தியது
05 . 03 . 2019

### சர்வேஸ்வரன் நவரத்தினம்

இலங்கை – யாழ்ப்பாணத்தில் பிறந்தவரும் இங்கிலாந்து – பிறன்ற்வூட்டில் வசித்தவருமான சர்வேஸ்வரன் நவரத்தினம் 05-03-2019 செவ்வாய்க்கிழமை பிறன்ற்வூட்டில் காலமானார்.

அன்னார் வைத்திய கலாநிதி சீ. நவரத்தினம் - திருமதி தர்மாம்பாள் தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான யாழ்ப்பாணம் Dr. தர்மலிங்கம் - சுந்தரவல்லி காலஞ்சென்றவர்களான விழிசிட்டி சீனிவாசகம் - சின்னம்மா ஆகியோரின் பேரனும் ஜனனி சிவகணேசன், வைத்திய கலாநிதி ஜெயகணேசன் நவரத்தினம் ஆகியோரின் சகோதரரும் சிவகணேசன், திருமதி அகிலா நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் கிரிசா சிவகணேசனின் மாமாவும் லோஜன் நவரத்தினத்தின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் :

**Last Saiva Rites:**
Wednesday, 13March 2019
12.00 to 3.00 PM
at Warley Park Golf Park
Magpie Lane, Little Warley
CM13 3DX

**Cremation:**
Wednesday, 13March 2019
3.30 – 4.30 PM
at Bentley Crematorium
Ongar Road, Brentwood
CM15 9RZ

தொடர்புகளுக்கு: Dr. சீ. நவரத்தினம்
Home: 01277 223 981 mobile: 07956 579 239
E-Mail: Seeniar_navaratnam@hotmail.com

(CS 23929/15/17)

## மரண அறிவித்தல்



### சுந்தரம் ஈஸ்வரதாஸ்

அல்வாய் தெற்கு, முள்ளாவத்தையைப் பிறப்பிடமாகவும் கோட்டைக்காடு மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் ஈஸ்வரதாஸ் நேற்று (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - தெய்வானையின் அன்பு மகனும் இளையவி - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும் சுந்தரேஸ்வரி, ரகுலேஸ்வரி, வைத்தியகலாநிதி சுந்தரேஸ்வரன், ரகுலேஸ்வரன் (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்), மங்களேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசமூர்த்தி, தர்மகுலசிங்கம், நவராணி, ஜெயமதி (பிரான்ஸ்), மீரா (பிரான்ஸ்), ரேணுகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், மாசிலாமணி, வைத்தியகலாநிதி வேலும் மயிலும், வைத்தியகலாநிதி துரைராசா, இராசலட்சுமி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (12.03.2019) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**Dr. E. சுந்தரேஸ்வரன் (மகன்)**

(CS 23136/15/17)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கோத்தாவும் தமிழர் எதிர்காலமும்

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை அடுத்த அரச தலைவராக்குவதற்கான முயற்சிகள் தீவிரம் பெற்றுள்ளன. தற்போதைய அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன மீண்டும் ஒருதடவை அரசதலைவர் தேர்தலில் போட்டியிடும் ஆசையைக்கொண்டிருக்கிறார், அதனாலேயே திடீர்குத்துக்கரணம் அடித்து மகிந்த ராஜபக்சவை மீண்டும் தலைமை அமைச்சராக்குவதற்கு முயற்சித்தார் என்று கூறப்பட்டபோதும் அவரைப் புறந்தள்ளி கோத்தபாயவை முன்னிலைப்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

அவ்வாறு கோத்தபாய அரசதலைவரானால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அது தீங்காக அமையும் என்பதை அவரது ஊடகப்பேட்டிகள் வெளிப்படுத்துகின்றன. தனது அண்ணனான மகிந்தராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில், குறிப்பாகப் போருக்குப் பின்னரான காலத்தில் பின்பற்றப்பட்ட கொள்கையில் இருந்து இம்மியும் விலகிச்செல்லாததாகவே அவரது கொள்கைகளும் இருக்கும் என்கின்றன அந்தப் பேட்டிகள்.

போருக்குப்பின்னரானகாலத்தில் சிங்களமக்களுக்குப்போர் வெற்றிப் போதையை ஊட்டியபடி, பொருளாதார அபிவிருத்தி என்கிற மாயையையும் காட்டினர் ராஜபக்சக்கள். அவர்களது இந்த நகர்வின் பின்னணில் பொருளாதார ரீதியாகச் சிறுபான்மை இனங்களை அடக்கி ஒடுக்குவதும் உள்ளடங்கியிருந்தது என்பதை மறுத்துவிட முடியாது.

யாழ்ப்பாணமாவட்டத்தில் வலி. வடக்குப்பகுதியில் பெருமளவு மக்கள் காணிகளை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு அதில் பண்டஉல்லாசவிடுதிகளை அமைத்ததும், முப்படையினரையும் பொருளாதார முனைப்புக்களில் ஈடுபடுத்தியதும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டது. பொதுப் பொருளாதாரக் கட்டமைப்புக்கள் அனைத்திலும் படையினரும் ஒரு பங்காளிகளாக மாற்றப்பட்டு வந்தார்கள். படையினரின் தளகர்த்தாக்களாக ராஜபக்சக்களே இருந்த நிலையில் துரித பொருளாதார விருத்தியில் படையினரின் பங்களிப்புத் தேவை என்பதை முன்னிலைப்படுத்தியன் ஊடாக ஒட்டுமொத்த நாட்டையும் படைகளின் ஊடாகத் தமது இறுக்கமான கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்.

கோத்தபாய ராஜபக்ச அதிகாரத்துக்கு வருவாராக இருந்தால் இதே கொள்கைகள்தான் மீண்டும் நடைமுறைக்கு வரும் என்பதை எதிர்பார்க்கலாம். இந்திய ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழ்ங்கிய நேர்காணலில், சிறுபான்மை இனங்களின் வாக்குகள் இன்றியே தன்னால் வெற்றி பெற முடியும் என்று கூறியிருக்கிறார். அதேபோன்று கொழும்புத் தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அதிகாரப் பகிர்வால் பிரச்சினைகள்தான் வரும் பொருளாதாரமேம்பாடு மட்டுமே தீர்வைத் தரும் என்றும் கூறியிருக்கிறார்.

இந்த இரு விடயங்களுமே அவரது அதிகாரத்தை நிர்ணயம் செய்கின்ற அடிநாதங்களாக இருக்கப்போகின்றன. தமிழ், முஸ்லிம் மக்களின் துணையின்றி அரசதலைவர் தேர்தலில் அவரால் வெற்றிபெறமுடியும் என்கிற அவரது நம்பிக்கைக்கு இரண்டு அடிப்படைகளே இருக்க முடியும். அதில் முதலாவது இனவாதம் இரண்டாவது தமிழர்களின் மீதான போர் வெற்றி. இவற்றின் துணையின்றி அவரால் நிச்சயம் சிங்கள மக்களின் முழு ஆதரவையும் திரட்ட முடியாது.

பொருளாதாரவிருத்தி என்பதன்கீழ் தமிழர்களின் பிரச்சினை உள்ளிட்ட எல்லாவற்றையும் மூடி மறைத்துவிட முடியும் என்றும் அவர் எண்ணுகின்றார்.

எனவே அவர் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் அரசமைப்புத் திருத்தப்படும், அரச தலைவருக்கான அதிகாரங்கள் மீளக் கொண்டுவரப்படும், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அடக்கி ஒடுக்கப்படுவார்கள், அதற்கு பொருளாதார அபிவிருத்தி என்கிற முழக்கம் பயன்படுத்தப்படும். இத்தகையதொருநிலைவராமல் இருப்பதற்காக மீண்டும் ரணிலையோ ஐக்கிய தேசிய முன்னணியையோ ஆட்சி அதிகாரத்துக்குக் கொண்டு வருவதும் ஒரு சரியான மாற்றுத் தெரிவாக இருக்காது என்கிற யதார்த்தமும் உறைக்கின்றபோது, தமிழர்களின் அரசியல் தீர்க்கமான ஒரு பாதையை நாடி நிற்கின்றது.



# சிங்களவர்களுக்கு நல்வழி காட்டாதவரை இன ஐக்கியத்துக்கு நாட்டில் இடமில்லை

இந்துமதி

சிங்களவர்கள் தமிழ் மக்களுக்குப் புரிந்த அட்டூழியங்கள் காரணமாகவே பிரபாகரன் தோன்றினாரென மனம் திறந்து கூறியுள்ளார் அரச தலைவர். தாம் சிறுவனாக இருந்தபோது தொடருந்துப் பயணத்தின்போது சிங்களவர்கள் தமிழ்மக்களுக்குப் புரிந்த அநீதியையும் அவர் எடுத்துக் கூறியுள்ளார். பல்லின மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் முறையே பெரும்பான்மையினராக உள்ளனர். மத ரீதியாகப் பிரிந்து காணப்பட்டாலும் மொழிரீதியாகத் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு நிற்பதைக் காண முடிகின்றது.

அந்நியரின் ஆட்சிக் காலம் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒரு பொற்காலம் என்றே கூற வேண்டும். கல்வியிலும் நிர்வாகத் திறனிலும் மேம்பட்ட நிலையில் அவர்கள் காணப்பட்டதால் அரச உயர் பதவிகளில் அமரக்கூடிய வாய்ப்புக்கள் அவர்களுக்குக் கிடைத்தன. இது சிங்கள் மக்களிடையே தமிழர்கள்மீது வெறுப்பு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது. இதனால் தமிழர்களைத் தமது எதிரிகளாகவே அவர்கள் பார்க்க ஆரம்பித்தனர்.

**கிழக்கைப் பறித்தது சிங்களவரின் சதியே**

தமிழர்கள் தமது பூர்வீகமான பூமியாகக் கருதிய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பரந்த நிலப் பரப்பைக் கொண்டதாக அமைந்திருந்ததும் சிங்களவரிடையே பொறாமையைக் கிளறிவிட்டது. கிழக்கு மாகாணத்தின் செழிப்பான தன்மை அவர்களின் கண்களைக் குத்தவே செய்தது. செழிப்பான பரந்த கிழக்கு மாகாணத்தை தமிழர்களிடமிருந்து பறித்தெடுக்கின்ற நோக்கில் பெருமளவு சிங்களவர்கள் அங்கு குறியேற்றப்பட்டனர். நாடு அந்நியரிடமிருந்து சுதந்திரம் அடைந்த பின்னர் நாட்டில் முதலாவது தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட டி.எஸ்.சேனாநாயக்க தமது முக்கியமான கடமையாக கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதையே கொண்டிருந்தார்.

இதுவே கிழக்கு மாகாணம் தமிழர்களின் பிடியிலிருந்து நழுவிச் சென்றமைக்கான முதன்மைக் காரணமாகும். தமிழர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் அமைந்திருந்தன. கொழும்பிலிருந்து வெகு தூரத்தில் உள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சிறிய நகரங்களிலும் இந்த வர்த்தக நிலையங்கள் அமைந்திருந்ததைக் காண முடிந்தது. தமிழர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு இவை பெரிதும் உதவின. இதைக்கூடச்சிங்களவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இவற்றை அழித்து விடுவதற்குச் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தனர். இனக்கலவரம் என்ற போர்வையின் கீழ் தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் நின்றுவிடாது அவர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களும் அழித்தொழிக்கப்பட்டன. இதனால் தமக்குச் சொந்தமான சகலதையும் இழந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கே தமிழர்களால் முடிந்தது.

**சிங்களவர் மத்தியில் ஊடுவியுள்ளது இனவாதம்**

இன்று இனப்பிரச்சினை தொடர்பாகப் பலரும் பேசுகின்றனர். சிங்களவர்கள் மனம் வைத்தால் இதற்குத் தீர்வு காண்பது பெரிய விடயமல்ல. சிங்கள மக்கள் தமக்குள் நச்சுப் பாம்புகளாக உருவெடுத்திருக்கும் இனவாத சக்திகளை முதலில் வேருடன் களைந்தெறிய வேண்டும். அதன் பின்னர் நன்மை தீமைகளை அலசிப் பார்க்க வேண்டும். தாம்விட்ட தவறுகளால் கொடிய போர் ஒன்று இடம் பெற்றதும் அதனால் தமிழர்களுக்கு மட்டுமல்லாது தமது இனத்துக்கும் பேரழிவு ஏற்பட்டதும் அப்போது அவர்களுக்குத் தெரியவரும். தமிழர்கள் ஆயுதமேந்திப் போராடியதில் உள்ள நியாயங்களும் அவர்களுக்குப் புரியும்.

சிங்களவர்கள் தமிழ்மக்களுக்குப் புரிந்த அட்டூழியங்கள் தொடர்பாகக் கூறியிருப்பவர்கள் ஒரு சாதாரண சிங்களவரல்ல. இந்த நாட்டின் அதியுயர்ந்த பதவியை வகிக்கின்ற அரச தலைவரே இதைக் கூறியுள்ளார். தமிழர்கள் இந்த நாட்டின் தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுவார்களானால் தமிழர்கள் மத்தியில் இன்னுமொரு பிரபாகரன் தோன்றிவிருவாரென்பதையும் அவர் அறியாதவரல்ல. அவரது ஆட்சியில் தமிழர்களுக்கு எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லையென்ற உண்மையும் அவர்களுக்குத் தெரியாத விடயமல்ல.

டி.எஸ்.சேனாநாயக்கா காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களும் நில ஆக்கிரமிப்பும் இவரது ஆட்சிக் காலத்திலும் இடம்பெறத்தான் செய்கின்றன.

அதையெல்லாம் பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்கவே இவரால் முடிகின்றது. ஒரு சிங்களவர் என்ற வகையில் தமது இனத்தவர்கள் தமிழர்களுக்குப் புரிந்த அட்டூழியங்களுக்கு சிறு பிராயச்சித்தமாவது புரிவதற்கு இவர் முன்வந்தி ருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்வதற்கும் இவரால் முடியவில்லை.

**மெத்தப்படித்தவர்களும் விதிவிலக்கு இல்லை!**

அரசியல்வாதிகளும் மெத்தப்படித்துவிட்டு பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாகப் பணிபுரிபவர்களும் இனவாதச் சிந்தனையுடன் செயற்படுகின்றனர். மெத்தப் படித்தவர்களின் தவறான ஆலோசனைகள் காரணமாக ஆட்சியில் இருப்பவர்கள் தவறான முடிவுகளை மேற்கொள்வதையும் காணமுடிகின்றது. இத்தகையவர்கள் தவறான முடிவுகளை மேற்கொண்டுவிட்டு அதற்கான பழியை சாதாரண சிங்கள மக்கள் மீது சுமத்துவது வேடிக்கையாகவுள்ளது. சிங்கள மக்களை இவர்கள் சரியான பாதையில் அழைத்துச் சென்றிருந்தால் இன மோதல்களுக்கும் கலவரங்களுக்கும் நாட்டில் இடம்பெற்றிருக்காது. தம்மை முற்போக்குச் சக்திகளென இனம் காட்டிக் கொண்டிருக்கும் சிங்கள இடதுசாரித் தலைவர்கள்கூட அரசியலில் தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக இனவாதத்தைக் கையில் தூக்கிக்கொண்டு திரிவதைக் காண முடிகின்றது.

பேராசிரியர் திஸ்ஸவிதாரண, வாசுதேவ நாணயக்கார ஆகியோரை இதற்கு உதாரணமாகக் கூற முடியும். இவர்களைப் பார்த்துப் பரிதாபப்படுவதைத் தவிர வேறென்னசெய்ய முடியும். சிங்கள மக்களுக்கு நல்வழிகாட்டி அழைத்துச் செல்லக்கூடிய நல்ல தலைவர்கள் உருவாகும் வரையில் இனப்பிரச்சினை தொடரவே செய்யும். தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காகப் போராட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படவே செய்வார்கள்.



யாழ்ப்பாணம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் சிற்றுண்டிச்சாலை திறப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு வைபவ ரீதியாகத் திறந்துவைத்தார். (ஐ)

# பற்றைகளாக உள்ள காணிகளால் மக்களுக்கு பெரும் இடையூறுகள்

## நடவடிக்கை எடுக்குமாறு உப தவிசாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 11

எவருடைய பராமரிப்புமின்றிப் பற்றைக்காடு போல் காட்சியளிக்கும் காணிகளினால் ஒருபுறம் நுளம்புத் தொல்லையும் மறுபுறம் சமூக விரோதிகளின் நடமாட்டங்களும் இடம்பெறுகின்றன. இதனால் அயலில் வசிப்பவர்கள் பெரும் சிரமங்களுக்கும் உபாதைகளுக்கும் உள்ளாகின்றனர் என்று வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் உப தவிசாளர் ஆ.சி.கணேசவேல் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம் சபை மண்டபத்தில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சுற்றுச்சூழல் சம்பந்தமாக ஆராயப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது 16 ஆம் வட்டாரத்தில் ஆடியபாதம் வீதிக்கு முன்பாகவுள்ள சுமார் 5 பரப்பு காணியின் உரிமையாளர் வெளிநாட்டில் வசித்து வருகின்றார்.

இந்தக் காணியை எவரும் பராமரிக்க முன்வராமை யால் பற்றைக்காடாக மாறியுள்ளது. நுளம்புத் தாக்கம் அதிகரித்துள்ள இந்த வேளையில் இந்தக் காணியிலும் நுளம்புகள் பெருகியுள்ளதால் அயலவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. அத்துடன் மறைவிடங்களை நாடித் திரியும் சமூக விரோதிகள் இந்தக் காணியைப் பயன்படுத்தி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இது குறித்துச் சபைக்குப் பலதடவைகள் தெரிவித்திருந்தபோதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏனைய இடங்களிலும் இதுபோன்ற நிலைகள் இடம் பெறுகின்றமையால் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க சபை முன்வர வேண்டும் - என்றார். (ஐ-115)



## மகளிர் தின நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 11

அல்லாரை மாதர் கிராம அபிவிருத்தி சங்க மகளிர் தின நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாதர் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி அ.லில்லிமலர் தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், திருமதி யசோதை சரவணபவன் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஆசிரியர் செ.பிரதாப், சிறப்பு விருந்தினர்களாக அல்லாரை முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அலுவலர் முகுந்தன், அல்லாரை சமுர்த்தி அலுவலர் திருமதி ர.கல்பனா, மதிப்புறு விருந் தினர்களாக அல்லாரை கிராம அலுவலர் க.ஜனகன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் சி. சிவநேசன், விழுது கள் நிறுவன நிர்வாக உறுப்பினர்கள் மாதர் சங்க உறுப்பினர்கள், கிராம மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-159)



## மாணவரது மாதிரிச் சந்தை

சாவகச்சேரி, மார்ச் 11

யாழ்ப்பாணம் மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையின் தரம் 2, தரம் 3 வகுப்பு மாணவர்களின் மாதிரிச் சந்தை வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சம்பத் வங்கி, சாவகச்சேரி கிளையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட மாணவர் சந்தையைப் பாடசாலை அதிபர் கா.கந்தசாமி மற்றும் வங்கி அலுவலர்கள் கூட்டாக நாடா வெட்டித் திறந்து வைத்தனர். மாணவர்களால் விற்பனை செய்யப்பட்ட பெருமளவு பொருள்கள் பொதுமக்களால் கொள்வனவு செய்யப்பட்டன. (ஐ-9)



## வீரசிங்கம் மத்திய கல்லூரி சிற்றுண்டிச் சாலை திறப்பு

கொடிகாமம், மார்ச் 11

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை நேற்றுமுன்தினம் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களின் பயன்பாட்டுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கேசவன் சுயந்தன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட் டது.

கல்லூரி அதிபர் தி.அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பழைய மாணவர் சங்கத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சிற்றுண்டி நிலையத்துக்குரிய தளபாடங்கள் முதன்மை விருந்தினரால் அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த 2017 ஆம் ஆண்டு கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி சிறப்பு நிதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் நலன்கருதி சிற்றுண்டி நிலையம் அமைக்க 15 லட்சம் ரூபா ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)



## சாரணிய விருது பெற்ற சபீனா

யாழ்ப்பாணம்.மார்ச் 11

இலங்கைப் பெண்கள் சாரணிய அமைப்பின் தேசிய அரச தலைவர் விருதை வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஜெயதாசன் சபீனா பெற்றுள்ளார். நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஜே/116 கிராம அலுவலர் பிரிவின் வசிக்கும் இவர் கிராமத்துக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். இலங்கைப் பெண்கள் சாரணிய அமைப்பின் தேசிய அரச தலைவர் விருது வழங்கும் நிகழ்வு கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி கொழும்பு அலரிமாளிகையின் முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விருதை திருமதி சிம்ரின் சிங்கிடமிருந்து மாணவிகள் பெற்றுக்கொண்டனர். (க)

# கல்விக்கு என்று மாத்திரம் தனி அமைச்சு வேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்விக்கான தனி அமைச்சு வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கல்வி அமைச்சு பிற அமைச்சுக்களுடன் இணைந்திருக்கின்றது. கல்விக்குக் காட்டும் கரிசனை குறைவாகவே உள்ளது.

எதிர்காலச் சந்ததியின் ஒரே கருவியாக உள்ள கல்விக்காக, ஆளணிகளைப் பெருமளவாகவும், மக்கள் தொகையை ஒருமித்தும் இருக்கின்ற ஒரேயொரு அமைச்சு கல்வி அமைச்சு மட்டுமே. இதனை ஏனைய அமைச்சுக்களுடன் இணைத்து இயக்குவது நல்லதல்ல.

பணிப்பாளர் வெற்றிடங்கள், பாடசாலை அதிபர்களின் வெற்றிடங்கள், ஆசிரியர்களின் வெற்றிடங்கள் எவையும் உடன் நிரப்பப்படுவதில்லை. இதற்கு உதாரணமாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. நீதிமன்றுக்கு வழங்கிய வாக்குறுதி காற்றில் மிதக்கின்றது.

பல பாடசாலைகளில் பொருத்தமான ஆசிரியர்கள் இல்லை. அதிபர், ஆசிரியர் இடமாற்றத்துக்கான முறையான கொள்கை இல்லை. பல பாடசாலைகளில் அதிபர்கள் பல வருடங்களாகக் கடமை புரிகின்றனர். அவர்கள் விரும்பினால்கூட வேறு பாடசாலைகளுக்குச் செல்ல முடியாதுள்ளது. கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு பாடசாலையில் ஒரு அதிபர் இருபது ஆண்டுகளாகக் கடமையில் உள்ளார். அவர் பல தடவைகள் வேறு பாடசாலைக்கு விண்ணப்பித்தும் பயனேதும் இல்லை.

நிதிக் கையாள்கையுடன் கூடிய தொழிலில் இருப்பவர்களுக்கும், சட்டத்துறையோடு இருப்பவர்களுக்கும் குறித்த காலங்களில் இடமாற்றம் வழங்கப்படுவது இலங்கையில் கட்டாயமானது. பாடசாலைகளில் பணமுகாமைத்துவத்துக்குப் பொறுப்பானவர் அதிபரே. அவரைத் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் வைத்தால் அவர் தவறு செய்வதற்கு உடந்தையாகிவிடும். இவை அனைத்தையும் சீர் செய்ய வேண்டுமாக இருந்தால் கல்விக்கென வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தனியான கல்வி அமைச்சு வேண்டும்.

மத்திய கல்வி அமைச்சு தனியாகவே உள்ளது. அது வேறு எந்த அமைச்சுக்களுடனும் இணைக்கப்படவில்லை. இதனை மாகாணக் கல்வி அமைச்சரும், கல்வி ராஜாங்க ஆமைச்சரும், ஆளுநர்களும் கவனத்தில் எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (த-8)

## 150 பெண்களுக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலர் திருமதி . ரூபினி வரதலிங்கம் தலைமையில் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அனைத்துலகப் பெண்கள் தினத்தில் நூற்றுக் கணக்கான பெண்கள்மதிப்பளிக்கப்பட்டனர்.

பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு பாடசாலை ரீதியில் இடம்பெற்ற கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் மாகாண,மாவட்ட மட்டத்தில் தனியாகவும், குழுவாகவும், மாகாண ரீதியிலும் மாவட்ட ரீதியிலும், தொழில் முயற்சியில் முன்னேற்றமடைந்த 150 பெண்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (க-105)

# அறம் போதிக்கப்பட்ட யாழில் இன்று வாள்கள் பேசுகின்றன

## செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் வருத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

அறங்கள் போதிக்கப்பட்ட யாழ்ப்பாண மண்ணில் இப்போது வாள்கள் பேசுகின்றன. முன்னொரு காலத்தில் நாம் சீருடையினருக்குப் பயந்திருந்தோம் இப்போது எமது பிள்ளைகளைப் பார்த்தே பயப்படும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறான நிலையில் மூன்று ஆளுநர்கள் மாறி மாறி வந்த போதும் இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நீதி நூல் தொகுப்புக்கள் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அற நெறிக் கற்கைகள் முன்னைய காலத்தில் யாழ்ப்பாணத்திலேயே சிறப்பாக இருந்தன. பின்னர் மெல்ல மெல்ல அருகிச் சென்றதுடன் ஏனைய மாவட்டங்களிலும் அறநெறி கற்கைகள் இடம்பெறத் தொடங்கின.

இந்த நிலையில் இந்துக் கலாசாரத் திணைக் களம்,மாவட்டச் செயலகம் ஆகியன இணைந்து மீண்டும் யாழ்ப்பாண மண்ணில் அற நெறியை விரிவாக்க முயற்சி எடுத்து அதில் வெற்றி கண்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து இந்துச் சிறார்களும் அறநெறி கற்கையைக் கற்று அறத்தினை பயின்று கொள்ள வேண்டும்.

அறத்தைப் போதித்த யாழ்ப்பாண மண்ணில் இப்போது வாள்கள் பேசுகின்றன. வடக்குக்கு மூன்று ஆளுநர்கள் மாறி மாறிப் பதவிக்கு வந்தனர். ஆனாலும் அவர்களால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்படியாயின் இது வேறு பிரதேசத்தவர்களால் இடம்பெறுகின்றதா எனச் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது.



நாம் அறமில்லாத சமுதாயத்தை உருவாக்கி விட்டோம். அதனை நாம் நல்வழிப்படுத்தி தூய சமூகத்தை உருவாக்க வேண்டும்.

இந்து சமய அறத்தின் படி வாழ்கின்றவர்களால் இவ்வாறான இழிவான செயல்களைச் செய்ய முடியாது. அறத்தைப் பயிலாமையால்த் தான் இவர்கள் மனித நேயம் அற்று இப்படிச் செய்கின்றனர். அண்மையில் இந்துக்களின் பிரசித்தி பெற்ற தலமான திருக்கேதீச்சரர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்துக்கான வளைவு மாற்று மதத்தினரால் உடைக்கப்பட்டது. அந்த சம்பவம் இந்துக்கள் மத்தியில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நாம் அதிலிருந்து மீளவில்லை.

பிரிட்டன் அரசில் அமைச்சராக இருந்த சேர். கந்தையா என்பவர் கேதீச்சரத்தை பாதுகாக்க கொட்டில் அமைத்து தங்கிய இடத்தில்தான் இப்போது பௌத்த விகாரை அமைத்துள்ளனர். இப்படியாக திருக்கேதீச்சரத்தின் வளங்கள் சூறையாடப்படுகின்றன.

இந்த நிலையிலும் தற்போதைய இந்துக் கலாசார அமைச்சர் சிவராத்திரிக்கு முதல்நாள் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் உடனடியாகத் தலையிட்டு நீதியை நிலைநாட்ட உதவி புரிந்தார். அதனை நாம் பாராட்டுகின்றோம்-என்றார்.

நிகழ்வில் வடக்கைச் சேர்ந்த அற நெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு நீதி நூல்களின் தொகுப்புக்கள் வழங்கப்பட்டன. நல்லை ஆதீன குருமுதல்வர், இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் உமாமகேஸ்வரன், யாழ்ப்பாணமாவட்ட செயலர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-8)



# பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 11

சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பன்னாட்டு மகளிர் தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை சங்க முன்றிலில் நடைபெற்றன.

நிகழ்வில் கடும் நோயால் பீடிக்கப்பட்டுள்ள சங்க அங்கத்தவரின் மகளான மாணவியின் மருத்துவச் செலவு நிதி, 80 வயதிலும் தளராது சந்தையில் தேங்காய் வியாபாரத்தில் ஈடுபடும் அம்மையாருக்கு ஊக்குவிப்பு நிதி ஆகியவை வழங்கப்பட்டன.

ஹற்றன் நஷனல் வங்கியால் சங்கத்தின் மூன்று அங்கத்தவர்களுக்குச் சுய உதவிக் கடன்களும் சங்கத்தின் நிதியிலிருந்து 20 உறுப்பினர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வட்டியில்லாக் கடன்களும் வழங்கப்பட்டன.

பன்னாட்டு மகளிர் தினத்தையொட்டி சங்க அங்கத்தவர்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டு மற்றும் கலாசாரப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கல் போன்றவை இடம்பெற்றன.

பிரிவில் கடமையாற்றி இடமாற்றல் பெற்றுச் சென்ற பொருளாதார அபிவிருத்தி அலுவலர் வினோதனுக்கு நிகழ்வில் பொன்னாடை போர்த்தி பரிசில்கள் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டார்.

சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன நிறைவேற்று அலுவலர் திருமதி மிதிலைச் செல்வி சிறிபத்மநாதன், சிறப்பு விருந்தினர்களாகச் சாவகச்சேரி இணக்க சபையின் தவிசாளர் வை.இராசரத்தினம், இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி சாவகச்சேரி கிளையின் முகாமையாளர் திருமதி பா.டெய்ஸி, வங்கியின் கடன் பொறுப்பதிகாரி ஜே.கிரிதரன், சாவகச்சேரி நகர கிராம மட்ட அலுவலர்கள், கிராம அபிவிருத்தி அலுவலர் ப.சதீஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-9)

# மகளிர்தின நிகழ்வுகள்



கொடிகாமம், மார்ச். 11

தேசிய சேமிப்பு வங்கியின் கொடிகாமக் கிளை அனுசரணையுடன் மட்டுவில் வளர்மதி மாதர் அபிவிருத்தி சங்கம் இணைந்து நடத்தும் பன்னாட்டு மகளிர் தின நிகழ்வுகள் வளர்மதி விளையாட்டரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்கத் தலைவி திருமதி லூ.சிவாஜினி தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஒளி அரசி மகளிர் சஞ்சிகை இணை ஆசிரியர் திருமதி பார்த்தீபன் ஜமிலா, சிறப்பு விருந்தினராக தென்மட்டுவில் சமுர்த்தி அலுவலர்கள் திருமதி பிறேமினி றோகான், ஒருங்கிணைப்பாளர் கொடிகாமம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அன்ரன் யோகநாயகம், மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கிராம மக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-159)

# அடுத்தவர் பற்றிய பயத்தாலேயே பெண்கள் பலர் முடங்குகின்றனர்

## தேசிய சேமிப்பு வங்கியின் பிராந்திய முகாமையாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 11

பல பெண்கள் அடுத்தவரை நினைத்துப் பயப்படுவதால் இன்று வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு தேசிய சேமிப்பு வங்கியின் பிராந்திய முகாமையாளர் ந.பகீரதன் தெரிவித்தார்.

பன்னாட்டு மகளிர் தினத்தையொட்டி தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையினர் மகளிர் தின நிகழ்வுகளை வங்கி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தினர். நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வங்கிகள் கடன்களை வழங்குகின்றன. சிலர் அவற்றால் இன்று முன்னேற்றமடைந்துள்ளனர். இது அவர்களது முயற்சியை எடுத்துக் காட்டுகிறது. தான் எடுக்கும் முயற்சியை அடுத்தவர்கள் என்ன சொல்வார்களோ எனப் பயப்பிடுவதால் ஒரு செயலிலும் முன்னேறமுடியாமல் தவிக்கின்றனர்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் அடுத்தவரின் குறைகளை கவனத்துக்கு எடுக்காமல் தமது கடமைகளை மேற்கொள்கின்றனர். அவ்விதம் வீட்டிலிருக்கும் பெண்கள் வீட்டில் இருக்கும் வேளையில் சுயதொழில் உதவிக் கடன்களைப் பெற்று கைத்தொழில்களை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்- என்றார்.

நிகழ்வில் மூன்று மகளிர்களுக்கு சுய உதவிக் கடன்களும், வங்கியுடன் நீண்டகால மாக சிறப்பாக வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சங்கத்தானை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கைதடி உபரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மண்டுவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கெற்பேலி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கு சிறப்பு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ-9)



யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கடந்த வருடம் ஜி.சி.ஈ சாதாரன தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவிக்கு பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் வே.பிரசாந்தன் தனது சொந்த நிதியிலிருந்து ஈருருளி ஒன்றை வழங்கியுள்ளார். (ஐ-70)

# விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 11

உந்துருளியும் ஈருருளியும் நேருக்கு நேர் மோதியதில் அவற்றில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர். சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் கச்சாய் வைரவர் கோவிலடியை அண்மித்த பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

விபத்தில் உந்துருளியில் பயணித்த கச்சாய் தெற்கைச் சேர்ந்தவரும், ஈருருளியில் பயணித்த சாவகச்சேரி பெருங்குளம் சந்தியைச் சேர்ந்தவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

# எழுத்தாளருக்கு நிதி உதவி

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் ஆக்கங்களைப் பதிப்புச் செய்வதற்கு நல்லூர் பிரதேச செயலகத்தால் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்தச் செயற்பாடு மேற்கொள்ளவுள்ளது.


எழுத்தாளர்கள் தமது பிரதியுடன் கிராம அலுவலரின் வருமான பரிந்துரையுடன் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்கும்படி பிரதேச செயலர் எ. அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (ஐ)

# சிங்களக் குடியேற்றங்களுக்கு அரச அதிகாரிகளும் ஆதரவா?


## ஊற்றுப்புலம் மக்கள் விசனம்

வவுனியா, மார்ச் 11

வடக்கு மாகாணத்தின் வவுனியா வடக்கில் ஊற்றுப்புலம் எனும் தமிழ்க் கிராமத்தின் காடுகள் அழிக்கப்பட்டுச் சிங்கள மக்களைக் குடியேற்றம் செய்யும் நடவடிக்கைகள் இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்றன என்று பிரதேச மக்கள் கூறியிருந்த நிலையில், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்று வவுனியா வடக்கு பிரதேச செயலர் அறிக்கையிட்டுள்ளார்.



சிங்களக் குடியேற்றத்துக்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று நேரில் பார்த்தவர்கள் மூலமும், ஒளிப்படங்கள் மூலம் தகவல்கள் வெளிவந்திருந்த நிலையில் வவுனியா வடக்குப் பிரதேச செயலகம் இவ்வாறு அறிக்கையிட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.



**திட்டமிட்ட செயல்**

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த எல்லைக் கிராமங்களைத் திட்டமிட்ட வகையில் பௌத்த மயமாக்கும் நடவடிக்கைகள் தற்போது அதிகரித்துள்ளன. முல்லைத்தீவு, செம்மலையில் உள்ள நீராவிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் அண்மையில் நீதிமன்ற உத்தரவையும் மீறிப் புத்தர் சிலை நிறுவப்பட்டிருந்தது.

அதைப்போன்றே வவுனியாவில் ஊற்றுக்குளத்தை அடுத்துள்ள கச்சல் சமனங்குளத்தையும், அதை அண்டிய பகுதிகளையும் பௌத்த மயமாக்கி சப்புமல்கஸ்கந்த என்று பெயர்மாற்றி சிங்களக் குடியேற்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



**தமிழர் பூர்வீகக் கிராமம்**

நெடுங்கேணிப் பகுதியில் அமைந்துள்ள ஊற்றுக்குளம் கிராமத்தில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்தனர். போர் காரணமாக அவர்கள் இடம்பெயர்ந்தனர். இன்னமும் அங்கு மீளக் குடியமராதபோதும், அங்கு விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது ஊற்றுக்குளம் கிராமத்தில் திடீரெனப் புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன் குளம் ஒன்றும் புதிதாகக் கொட்டில்களும் அமைக்கப்பட்டுள்ளன. சிங்கள மக்களைக் குடியேற் றும் நடவடிக்கைகள் இரகசியமாக, முழுவீச்சில் நடைபெறுகின்றன என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இந்த விடயத்தைப் பிரதேச மக்கள் நெடுங்கேணிப் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். நெடுங்கேணிப் பிரதேச சபைத் தவிசாளர், உறுப்பினர்கள் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று ஆராய்ந்தனர். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்த சபையின் தவிசாளர் தணிகாசலம்

"அந்தப் பகுதியில் 200 ஏக்கருக்கு நீர் வழங்கக் கூடிய வகையில் குளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதி தமிழர்கள் வாழ்ந்த நிலங்கள்தான். அங்கு 2 அடிக்கும் உயரமான புத்தர் சிலை ஒன்று நிறு வப்பட்டுள்ளதுடன் பௌத்த பிக்கு ஒருவரும் உள்ளார். அவருக்கு இரு காவலாளிகளும் உள்ளனர்.

சிலைக்குச் செல்லும் இரு பக்கமும் சிறிய கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் சிங்களக் குடியேற்றத்தை உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது என மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களே அரசிடம் பேச வேண்டும். நாங்கள் இது தொடர்பாகப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளோம்." என்று கூறியிருந்தார்.

**எதுவும் இல்லை**

இந்த விடயம் தொடர்பாக மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கடந்த மாதம் மாவட்டச் செயலரிடம் கேள்வி எழுப்பியிருந்தார். இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து உண்மைத் தன்மையை அறிக்கையிட வேண்டும் என்று வவுனியா வடக்குப் பிரதேச செயலரிடம், வவுனியா மாவட்டச் செயலர் கோரியிருந்தார்.

அது தொடர்பில் தற்போது பிரதேச செயலர் அறிக்கையிட்டுள்ளார். அந்தப் பகுதியில் காடு துப்புரவு செய்தமை தொடர்பில் எவரும் தகவல் தெரிவிக்கவில்லை. அங்கு ஆராயச் சென்ற போது அங்கு எவரும் இருக்கவில்லை. அங்கே இடம்பெறும் குள அபிவிருத்தி தொடர்பாகவும், புத்தர் சிலை தொடர்பாகவும் தரவுகள் கிடைக்கவில்லை என்றும் அவர் அறிக்கையிட்டுள்ளார்.

**மக்கள் சந்தேகம்**

மகாவலி அதிகார சபையும், வன வளத் திணைக்களமும் இதற்கு உடந்தை என்று மக்கள் கூறுகின்றனர். வவுனியா, எல்லைக் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் அங்கு மீளக் குடிய மரும்போது அங்குள்ள மரங்களை வெட்டுவதற்கு வன வளத் திணைக்களம் தடை போடுகின்றது. மக்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்கின்றது.

ஆனால் இவர்கள் காடுகளை அழித்து குடியேற்றங்க ளைச்செய்யும்போது மௌனமாக வேடிக்கை பார்க்கின்றது என்று பிரதேச மக்கள் கடும் விசனம் வெளியிட்டனர்.

இப்போது வவுனியா வடக்குப் பிரதேச சபை மாவட்டச் செயலகத்துக்கு வழங்கியுள்ள அறிக்கையும் இந்தச் சந்தேகத்தை அதிகப்படுத்துகின்றது என்கின்றனர் பிரதேச மக்கள்.

**என்ன நடக்கிறது?**

மக்கள் தமது பூர்வீக நிலங்கள் பறிபோகின்றன என்று அச்சம் தெரிவித்துள்ளனர். அதிகாரிகளோ அவ்வாறு நடக்கவில்லை என்கின்றனர். ஆனால் நேரில் சென்று பார்த்த பிரதேச சபை உறுப்பினர்கள், அங்கு குள அபிவிருத்தி நடைபெறுகின்றது என்றும், புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றனர். ஒளிப்படங்களும் வெளியாகியிருந்தன. மக்கள் பொய் கூறுவதற்கான தேவைப்பாடுகள் எவையும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் நேரடியாகக் களமிறங்கி, சிங்களக் குடியேற்றத்துக்கான இரகசிய வேலைத் திட்டங்கள் நடைபெற்றால் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

எல்லைக் கிராமங்க ளைப் பாதுகாப்பதன் மூலமே எமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்பதைப் புரிந்து கொண்டு விரைந்து செயலாற்ற வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ)

---

## முதியவரின் சடலம் மீட்பு

வவுனியா, மார்ச் 11

வவுனியா, உக்கிளாங்குளத்தில் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். அந்தப் பகுதியைச் சேர்ந்த செ.சிவராஜா (வயது 64) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

உக்கிளாங்குளம், 4 ஆம் ஒழுங்கைப் பகுதியில் உள்ள வீட்டில் தந்தையும் மகளும் வசித்து வந்துள்ளனர். சம்பவ தினம் உணவருந்தியபின் இருவரும் உறங்கியுள்ளனர். நித்திரை விட்டு எழுந்த மகள் தந்தையைத் தேடிய போது வீட்டின் முன் வாயில் பகுதியில் உள்ள தண்ணீர் பம்பி அருகில் தந்தை விழுந்து கிடப்பதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து அயலவர்கள் மற்றும் உறவினர்களின் உதவியுடன் தந்தையை எழுப்ப முயன்ற போது அவர் உயிரிழந்திருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த சடலத்தை பார்வையிட்டதுடன், தடயவியல் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். சடலம் வவுனியா பொது மருத்துவமனையில் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஜ-110)

---

## கட்டுப்பாட்டை இழந்ததால் கட்டடத்துக்குள் புகுந்த பட்டா

கொடிகாமம், மார்ச் 11

கட்டுப்பாட்டை இழந்த பட்டாரக வாகனம் சனசமூக நிலைய கட்டடத்துக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் மிருசுவில் வடக்கில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் இருந்த நேயம் சனசமூக நிலையக் கட்டடத்துக்குள் வாகனம் புகுந்ததனால் கட்டடமும் வாகனமும் சேதமடைந்தன.

இந்தச் சனசமூக நிலைய கட்டடத்தில் தினமும் 25 க்கு மேற்பட்ட மாணவர்கள் மாலை நேர வகுப்புகளில் கலந்துகொள்வது வழமை. அன்று வெள்ளிக்கிழமை என்பதால் வகுப்புக்கள் இல் லாததால் மாணவர்கள் வருகை தரவில்லை. இதனால் உயிராபத்துக்கள் தவிர்க்கப்பட்டன் என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சாரதியைக் கைது செய்ததுடன் சேதமடைந்த வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். (ஜ-159)





## 20 ஆண்டுகளின் பின்னர் மக்களுக்கு வீட்டுத் திட்டம்

வவுனியா, மார்ச் 11

வவுனியா செட்டிகுளம் பிரதேசெயலர் பிரிவுக்குட்பட்ட நேரியகுளம் மற்றும் வேப்பங்குளம் பகுதி மக்கள் நீண்ட காலமாக நிரந்தர வீடுகள் இன்றி தற்காலிக வீடுகளில் வாழ்ந்தனர் இவர்களுக்குத் தற்போது வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. தமக்கு வீட்டுதிட்டம் வழங்க வேண்டும் என்று கோரி பல கவனவீர்ப்பு போராட்டங்களிலும் மக்கள் ஈடுபட்டிருந்தனர். பல தரப்பட்டோரின் முயற்சியின் பயனாக தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக இரு கிராமங்களுக்கும் முதற்கட்டமாக 36 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச சபை உறுப்பினர் ஜே.டெல்சன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான செ.மயூரன்,ம. தியாகராஜா செட்டிகுளம் பிரதேச்செயலர் க.சிவகரன், தவிசாளர் ஆ.அந்தோணி, வீடமைப்பு அதிகாரசபையின் முகாமையாளர் வி.குருஸ் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-110)

## விபுலானந்தா கல்லூரியில் நேற்றுப் பெரும் தீ விபத்து

வவுனியா,மார்ச் 11

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் மதியம் ஏற்பட்ட தீப் பரவல் சுமார் ஒரு மணிநேர போராட்டத்தின் பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பபட்டது.

விபுலானந்தா கல்லூரியின் கணினி அறையில் திடீரென தீ பற்றியெரிந்துள்ளது. பாடசாலை சமூகத்தினர் பண்டாரிக்குளம் பொலிஸார் மற்றும் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பண்டாரிக்குளம் பொலிஸார் பாடசாலை மாணவர்களை பாதுகாப்பாக வெளியேற்றினார்கள்.

அதன் பின் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர் சுமார் ஒரு மணிநேரப் போராட்டத்தின்பின் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கணினி அறையில் ஏற்பட்ட மின்னொழுக்கினால் தீவிபத்து நேர்ந்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (க-222)

# போராட்டத்தில் இணையுங்கள்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வேண்டுகோள்

வவுனியா, மார்ச் 11

எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஊடாக நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமையத்தின் நிர்வாகக் கூட்டம் நேற்று வவுனியா வாடிவீட்டுமண்டபத்தில் நடைபெற்றது. அதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமையத்தின் ஊடகப் பேச்சாளர் கே.தேவராஜா இதன்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஊடாக நடைமுறைப்படுத்த இருக்கும் ஆர்ப்பாட்ட பேரணியின் போது, வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பின் சகல பிரதிநிதிகளும், வவுனியா மாவட்ட சகல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், பொது மக்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று எங்கள் சங்கத்தின் சார்பில் முழுமையான அழைப்பை நாங்கள் விடுத்துள்ளோம்.

போர் ஓய்வுக்கு வந்து பத்துஆண்டுகள் முழுமையாகிக்கொண்டிருக்கும் நேரத்திலும், அரசோ அரச சார்பானவர்களோ, அரச அதிகாரிகளோ இந்தக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் ஆக்க பூர்வமான எந்த ஒரு நடவடிக்கையும்மேற்கொள்ளவில்லை. பல்லாயிரக்கணக்கான நிதி பாதுகாப்பு செலவீனங்களுக்காக வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்தும், எமது விடிவுக்காகவோ, இந்த காணாமல் ஆக்கப்படவர்களின் விடிவுக்காகவோ இந்த காணிகளை இழந்து நிற்கும், வீடுகளை இழந்து நிற்கும் எம் உறவுகளின் காணிகளை பெற்றுகொடுப்பதற்காகவோ அல்லது அரசியல் கைதிகள் என்ற போர்வையில் இன்று பல ஆண்டுகளாகச் சிறையில் வாடிகொண்டிருக்கும் இளைஞர்களை மீட்பதற்காகவோ, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் அரசு மேற்கொள்ளாத நிலையில் இந்த முறை வருகின்ற வரவு -செலவு திட்டத்தில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்ய போகின் றார்கள். மீண்டும் அவர்கள் அரசுக்கு முண்டு கொடுக்க போகின்றார்களா?. அல்லது எமது தேவையை பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்த போகின்றார்களா என்பது எமக்கு தெரியாது. மக்கள் போராட்டங்களை நோக்கி நாம் சென்றுள்ள நிலையில் இந்த போராட்டம் வலுப்பெற்று பெரிய தோர் போராட்டமாக வடக்கு - கிழக்கில் பரிணமிப்பதற்கான நகர்வுகளை மேற்கொண்டுவருகின்றோம். அனைத்து தரப்புகளும் ஒன்றிணைந்து இந்த 16 ஆம் திகதி மேற்கொள்ள இருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஒன்று கூட வேண்டுமென்று வேண்டுகின்றோம்.

- என்றார். (க-110)

## தமிழரசுக் கட்சியின் குமுழமுனை கிளை தெரிவு

முல்லைத்தீவு, மார்ச் 11

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசசபைப் பிரிவுக்குட்பட்ட, குமுழமுனை வட்டாரத்துக்குரிய, இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் மூலக்கிளை, நேற்று முன்தினம் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டது.

குமுழமுனை வட்டாரத்தினுள் குமுழமுனை கிழக்கு, குமுழமனை மத்தி, குமுழமுனை மேற்கு, ஆறுமுகத்தான் குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன.

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கரைதுறைப்பற்று பிரதேசசபைப் பிரிவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டி ருப்பவ ருமான து. ரவிகரன் தலைமையில் குமுழமுனை பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் புதிதாக குமுழமுனை வட்டாரத்துக்குரிய மூலக்கிளைக்கு தலைவர், செயலர், பொருளாளர், உபதலைவர், உபசெயலர், மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் எனத் தெரிவுகள் இடம்பெற்றதுடன், இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு புதிதாக அங்கத்தவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். (க)



## உதவிப் பொருள் கையளிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 11

புதுக்குடியிருப்பு புதிய குடியிருப்பு பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஒரு தொகுதி மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள நிதாகோகுலம் பெண்கள் - சிறுவர் நலன்புரி நிலையத்தினரால் உதவிகள் வழங்கிவைக்கப் பட்டுள் ளன.

நேற்று முன்தினம் புதியகுடியிருப்புப் பகுதியில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பிரபா தல்லமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிதா கோகுலம் சிறுவர் நலன்புரிநிலையத்தின் தலைவர் க.நிதர்ஷன் கலந்து கொண்டு உதவிகளை வழங்கி வைத்தார்.

புதிய குடியிருப்பைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இரண்டு பாடசாலை மாணவிகளின் கற்றல் செயற்பாட்டைக் கருத்தில்கொண்டு இரண்டு ஈருருளிகளும் 60குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளும், மதிய உணவும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (க-ரி3)



## மகளிர் தின நிகழ்வு

முல்லைத்தீவு,மார்ச் 11

முல்லைத்தீவு திருமுறிகண்டி வசந்தம் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் 2019 ஆம் ஆண்டு பன்னாட்டு மகளிர் தினம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முறுகண்டி கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரதீபன் கலந்து கொண்டார். கிராம அலுவலர், அபிவிருத்தி அலுவலர் , சமுர்த்தி அலுவலர், சிறுவர் நலஅலுவலர் , கிராம அபி விருத்தி சங்க உறுப்பினர்கள் மாதர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-222)

## சாதனைகள் செய்வோரை ஊக்கப்படுத்தல் அவசியம்

### வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ. மயூரன் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 11

எமது சகோதரர்களின் கோரிக்கையை நிறைவேற்றக் கோரி இவ்வாறான சாதனைப் பயணங்களை மேற்கொள்ளும் போது அவர்களை ஊக்கப்படுத்தப்படுவது கிடையாது. இது வெட்கப்பட வேண்டிய விடயம்.

இவ்வாறுவடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ. மயூரன் தெரிவித்தார்.

26 ஆவது நாள்கள் ஈருருளியில் இலங்கை பூராகவும் 2ஆயிரத்து 125 கிலோ மீற்றர் சாதனைப்பயணத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் வவுனியா திரும்பிய தர்மலிங்கம் பிரதாபனை வரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும்போது வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதாபனின் இந்தப் பயணத்துடன் தனது மூன்றாவது சாதனைப்பயணம்த்தை நிறைவு செய்துள்ளார். நாங்கள் இவரை ஊக்கப்படுத்தும்போது தான் இவர் தொடர்ந்தும் தமது சாதனையை தொடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார். ஆனால் நாங்கள் அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு தவறுகின்றோம் என்பதுதான் யதார்த்தமான நிதர்சனமான உண்மை.

அவருடைய அந்த மூன்று அம்சக்கோரிக்கைகள் நிறைவேற வேண்டும். உங்களைப் போன்று நாங்கள் அதனைச் செய்ய முற்படப்போவதுமல்ல, அதைத் தொட்டுப்பார்க்கப்போவதுமல்ல நீங்கள் ஆரம்பிக்கின்றபோது ,உங்களை எத்தனையோபேர் கேலி செய்திருக்கலாம். அல்லது வீண் முயற்சி என்று கூட சொல்லியிருக்கலாம். ஆனால் இன்று நீங்கள் உங் களுடைய சாதனைப்பயணத்தை முடித்து இருக்கின்றீர்கள் இனி உங்களுடைய விடா முயற்சியை நிச்சயமாக ஒவ்வொருவரும் சொல்லுவார்கள்

- என்றார். (க)

## ஏழிசை மாலை 26 நிகழ்வுகள்

சாவகச்சேரி, மார்ச் 11

தென்மராட்சி கல்வி வலயத்தினர் வலய இசையாசிரியர்கள் மற்றும் மணவர்கள் இணைந்து மாதாந்தம் வழங்கும் ஏழிசை மாலை 26 நிகழ்வுகள் வலய நிகழ்வாக இன்று பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையில் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ஏழிசை மாலை 26 நிகழ்வுகள் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளன.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக திருகோணமலை தென்கயிலை ஆதீன தவத்திரு அகத்தியர் அடிகளாரும், தென்மராட்சி பிரதேச கலாசார அலுவலர்-கு.ரஜீவனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலக அபிவிருத்தி அலுவலர் முதுகலைமாணி திருமதி சந்திரிகா சுஜித்குமாரின் இசைக்கச்சேரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் முரளி வருண்ஜியின் பக்திப் பாடல், மந்துவில் சிறிபாரதி வித்தியாலய மாணவர்களின் குழுப் பாடல், ஓய்வுபெற்ற இசையாசிரியை திருமதி தெய்வநாயகி கிருஷ்ணசாமியின் தனி இசை, ஓய்வுபெற்ற இசையாசிரியை திருமதி றஞ்சனாதேவி சுப்பிரமணியத்தின் மாணவர்களின் வயலின் இசை, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி இசையாசிரியைத் திருமதி புஷ்பராணியின் மாணவர்களின் மெல்லிசைப் பாடல்களும் இடம்பெறும். (க-9)

## போதை ஒழிப்பு விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11
உள்ளூராட்சி உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கான மருந்து பாவனை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு இன்று பகல் 9 மணி தொடக்கம் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணியகத்தில் நடைபெறவுள்ளது. உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள செயலமர்வில், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, நகரசபைகள், வடமராட்சி தெற்கு, மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்கு, வேலணை. வலிகாமம் தென்மேற்கு, ஊர்காவற்றுறை, காரைநகர், நெடுந்தீவு ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர் ஆகியோரில் ஒருவரும் செயலர், நிர்வாக அலுவலர், வருமான அலுவலர், பொது சுகாதார பரிசோதகர், ஆகியோரில் ஒருவரும், சனசமூக அபிவிருத்தி அலுவலர், அபிவிருத்தி அலுவலர், தொழில்நுட்ப அலுவலர், முகாமைத்துவ உதவியாளர், ஆகியோரில் ஒருவரும், சுத்திகரிப்பு தொழிலாளி, சாலை அபிவிருத்தி தொழிலாளி ஆகியோரில் ஒருவருமாக, ஒவ்வொரு சபையிலிருந்தும் நான்கு பேர் வீதம் கலந்து கொள்ளுமாறு பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன் அறிவித்துள்ளார். (க-9)

# அமைச்சர் சென்றுவிட்டார் இனி மக்களின் நிலமை?

யாழ்ப்பாணம், மார்ச் 11
தங்களிடம் உள்ள குறைகளை அதிகாரிகளிடம் கூறியபோது அவற்றுக்குச் சற்றேனும் செவிசாய்க்காத அதிகாரி கள் அமைச்சர் ஒருவர் வந்ததை அடுத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆலாய் பறந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டுள்ளனர். இப்படியான சம்பவம் மூளாயில் அமைக்கப்பட்டுள்ள பொன்னொளிக் கிராமத்தில் நடந்துள்ளது.

பொன்னாலைச் சந்தி மூளாயில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிதியில் அமைக்கப்பட்ட 65 வீடுகள் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் சஜித் பிரேமதாசவால் திறந்து வைக்கப்பட்டது. அந்த வீடுகள் திறந்து வைக்கப்படுவதற்கு ஒரு நாள் முன்பாக அந்தப் பகுதிகளில் அதிகாரிகள் காலில் பம்பரம் மாட்டிக் கொண்டு திரிந்தனர். "மாடு சொன்னால் கேக்காது மணிகட்டின மாடு சொன்னால் தான் கேட்கும்" போல என்று பேசிக் கொண்டனர் அந்தப் பகுதி மக்கள்.

**வீடு கையளிக்க முதல் நாள்**

வீடுகள் அனைத்தும் கையளிக்கப்படுவதற்கு அதாவது அமைச்சர் வருவதற்கு முதல் நாள் வீட்டுத் திட்டத்தில் உள்ள 65 வீடுகளுக்கும் குடிதண்ணீர் வழங்கப்பட்டது. அந்தக் குடிதண்ணீர் சங்கானைப் பிரதேச செயலகத்தால் வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. ஆயிரம் லீற்றர் குடி தண்ணீர் இருநூறு ரூபாவுக்கு வழங்கப்பட்டது. இந்தனை நாளும் குடிதண்ணீருக்கு எவ்வளவு நாள் அலைந்திருப்போம் என்று பேசிக் கொண்டனர் மக்கள். உழவு இயந்திரத்தில் மாறி மாறி கொண்டுவந்து வீட்டின் முன்னால் காத்திருந்த நீர்த் தாங்கிகளை நிரப்பினர். வீடுகள், வீதிகள், அனைத்தும் துப்புரவு செய்யப்பட்டன. பிரதேச சபையின் ரோளர் மூலம் அமைச்சர் நடந்து செல்லும் இடங்கள் செம்மையாகச் சீரமைக்கப்பட்டது. அதிகாரிகள் அங்கும் இங்கும் உலாவி வேலைகள் நடைபெற்றிருக்கின்றனவா என்று நோட்டமிட்டனர்.

மாலை ஒவ்வொரு வீடுகளுக்கும் வந்த அலுவலர்கள் வீட்டுக்குரிய இலக்கங்களை வீட்டாருக்கு வழங்கினர். அந்த இலக்கத்தை குத்திக் கொண்டு பந்தலுக்கு வரவேண்டும் என்று கூறிச் சென்றனர். இரவு மூன்று பேர் (பெண் அலுவலர்கள்) ஒவ்வொரு வீடுவீடாக வந்தார்கள். அவர்கள் வீடு திறப்பதற்கு ஏற்ற நிலையில் உள்ளதா என்பதை பரிசீலித்துச் சென்றனர். பின்னர் மூன்றுபேர் வந்தார்கள். அவர்கள் வீட்டின் முன்னால் பொருத்தப்படும் நாடாவை வெட்டுவதற்கு என்ன ஆயத்தங்கள் செய்ய வேண்டும் என்பதை வீட்டாருக்கு தெளிவு படுத்தினர். தட்டு ஒன்றில் தாங்கள் கொண்டு வந்த வர்ணக் கடதாசியை ஒட்டி அழகான தட்டை வடிவமைத்தனர். (நாடா வெட்டுவதற்கு முன்னர் அமைச்சருக்கு வழங்குவதற்காக) ஒருவர் புதிய கத்திரிக்கோலை வழங்கினார். மற்றொருவர் கழிப்பறைக்கு கதவு போட்டிருக்கின்றதா என்று பார்த்து தான் கொண்டு வந்த (பைல்) மட்டையில் குறித்தார். போகும் வழியில் கல்லொன்று முழித்துக் கொண்டு வெளியில் தெரிந்ததைக் கண்ட அலுவலர்களில் ஒருவர் "பாதையை சரிசெய்துவிடுங்கள் அமைச்சர் வரும்போது இப்படி இருந்தால் அவர் எங்களை இடம் மாற்றி விடுவார்" என அறிவுறுத்தினார். என்ன நினைத்தாரோ பின்னர் தானே அந்தக் கல்லை அகற்றிவிட்டுச் சென்றார். அதிகாரிகளின் இந்த அக்கறையான சேவையைப் பார்த்துக் கன்னத்தில் கை வைத்தனர் அங்கிருந்த மக்கள்.

**வீடு கையளித்த நாள்**

வீடு கையளிக்க அமைச்சர் வரும் நாள் அதாவது நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு அமைச்சர் வீடுகளைத் திறப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. இரண்டு அரை மணிநேரத்து முன்பாகவே 65 வீடுகளுக்கும் 65 அலுவலர்கள் வந்தார்கள். வீடு கையளிக்கும் வரை அந்த வீட்டுக்கு அவர்களே பொறுப்பானவர்கள் என்றார்கள். அவர்கள் வந்து நிறைகுடம் வைக்கப்பட்டுள்ளதா?, மாலைகள் ஆயத்தமா?, வீடு சுத்தமாக உள்ளதா? என்பதை ஆராய்ந்து அதற்குரிய ஆயத்தங்களைச் செய்தார்கள். அதன்பின்னர் இரு ஆண் அலுவலர்கள் வந்தார்கள். அவர்கள் வீட்டுக்கு முன்னால் கட்டும் (ரிபன்) நாடாவை ஒவ்வாரு வீட்டாருக்கும் வழங்கினார்கள். அந்த நாடாவை வீட்டில் நின்ற அலுவலர் வாங்கி வீட்டுக்கு முன்னால் கட்டினார். அமைச்சர் வீட்டைத் திறந்து வைத்த அடுத்த நொடியே வீட்டாரை அழைத்துச் சென்று பந்தலில் அமர்த்துவதும் அவர்களுடைய பணியாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அமைச்சர் வருவதற்கு அரைமணி நேரத்துக்கு முன்னரே பதவி நிலை அதிகாரிகள் கிராமத்துக்குள் வந்தனர். அவர்கள் அங்கு பொறுப்பாக நின்ற அதிகாரிகளிடம் ஆயத்தங்கள் தொடர்பாகக் கேட்டறிந்து அமைச்சரின் வருகைக்காகக் காத்திருந்தனர். அமைச்சர் வந்தார். ஒவ்வொரு வீடுகளையும் அவரே சென்று திறந்தார். அமைச்சர் வீடுகளுக்கு வர முன்னர் விழுந்தடித்து ஓடி வந்தார் ஒருவர். அவர் அமைச்சரை எப்படி வரவேற்பது?, அவருக்கு எப்படி வெற்றிலை கொடுப்பது?, மாலை போடுவது யார்?, அவர் எப்படிப் போடவேண்டும்?, பொட்டு வைப்பது யார்? போன்ற கேள்விகளைக் கேட்டு அனைவரையும் ஆயத்தப்படுத்துவது அவரது வேலை. வீட்டைத் திறந்து வைத்து அமைச்சர் சென்றவுடன் வீட்டில் நின்ற அலுவலர் வீட்டாரை அழைத்துக் கொண்டு சென்று பந்தலில் அமர்த்தினார். காலில் சக்கரம் கட்டியதுபோன்று சுற்றிச் சுழன்ற அதிகாரிகளையும், அலுவலர்களையும் பார்த்து அங்கிருந்த மக்கள் வாயடைத்துப் போயினர்.

**திரும்பிப் பார்க்காத அதிகாரிகள்**

வீடு கட்டுதற்கு ஆரம்பித்ததில் இருந்து அந்த வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு மக்கள் எவ்வளவோ சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். வீடு கட்டுதற்குத் தேவையான நீரில் இருந்து கூரை, வேலைகள் செய்வதற்கு தேவையான மின்சாரம் வரை ஒவ்வொன்றையும் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் பட்ட துன்பம் சொல்லில் அடங்காமல் இருந்தாலும் வீடுகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்களின் சேவை பாராட்டத்தக்கது. காரணம் வறுமை அடிப்படைத் தேவைகளின் அழுத்தத்தால் பின்னின்றவர்களுக்கு புத்துயிர்கொடுத்து வீட்டுக்கட்டிமுடிக்கவைத்த பெருமை அவர்களையே சாரும். வழங்கப்பட்ட நிதியில் முழுமையாக வீடு கட்டி முடிக்க முடியாது மேலதிக நிதியை திரட்டுவ தற்கு ஏறி இறங்காத வங்கிகள் இல்லை. கட்டி முடித்த வீடுகளுக்கு குடிபுகுந்த பின்னர் நித்தமும் குடி தண்ணீருக்கு பட்ட சிரமங்கள் ஏராளம். குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளவதற்காக அவர்கள் செல்லாத அலுவலகங்களே இல்லை. மக்கள் துயரங்களைச் சந்திக்கும் போதெல்லாம் கதிரைகளில் இருந்து கதைகூறும் அதிகாரிகள் அமைச்சர் வருகிறார் என்றதும் பதறியடித்து பணியாற்றியதை அந்த மக்கள் வாயடைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்ததில் வியப்பில்லை. ஏனெனில் அவர்களுக்கு இது புதிது. அமைச்சர் வீடுகளைக் கையளித்துச் சென்றுவிட்டார். நிரப்பி விட்ட தண்ணீரும் ஓரிரு நாளில் முடிந்துவிடும். அதன்பின்னர்?. (எ-21)

## கலாநிதி ந.சிவராஜா

அகலமும் ஆழமும் கொண்ட சமூக மருத்துவ ஈடேற்றம் கண்டவர்



சமுதாய மருத்துவத்தின் மருத்துவ கலாநிதி ந.சிவராஜாவின் சிந்தனையிலும் சேவையிலும் இளமையே காணப்பட்டது. மக்களை நேசிப்பவர்கள், சமுதாய உறவில் கலந்தவர்கள், தன்னலங் கருதாதவர்கள், முதுமை காண்பதில்லை என்ற உண்மைக்கு அவர் உதாரணம். அத்தகைய உதாரண மனிதரை இன்று தமிழ்ச் சமூகம் இழந்துள்ளது.

நடராஜா சிவராஜா நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியையும், பௌத்த கலாசார ஆனந்தா கல்லூரியில் மேற்படிப்பையும் மேற்கொண்டவர். பின்னர் தமிழ்மொழியில் மருத்துவ எழுத்தாளர், பேச்சாளர் என நீண்டகாலம் மிளிர்ந்தவர். 'சுகமஞ்சரி' சஞ்சிகையின் ஆசிரியர். அதே வேளையில் மருத்துவ விஞ்ஞான இதழான jaffna medical jaurnal இன் மதிப்புள்ள ஆசிரியரும்கூட.

**கலாநிதி சிவராஜாவின் சமூக மருத்துவ ஈடேற்றம் அகலமும் ஆழமும் கொண்டது. வெவ்வேறு திசைகளில் எல்லைகள் கண்டது. எமது சிறுவர் போசாக்கின் நலிந்த நிலையை புள்ளி** விவரங்களுடன் உலகறியக் காட்டியவர். முதன் முதலாக வயோதிபரின் உடல், உள, சமூக சுகநிலை பற்றிய ஆய்வை தனது கலாநிதிப் படிப்புக்கு எடுத்துக் கொண்டவர். சிவராஜா கற்பிக்கும் கலையில் இதயம் கவர்ந்தவர். நிறைவான சிறந்த ஆசிரியர். யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இதை அறிவர். கல்வி போல் நல்ல கல்விமானின் கற்பித்தலுக்கும் எல்லை ஏது? நிர்வாகம், தலைமைத்துவம், முகாமைத்துவம் என்பன சிவராஜாவின் உடன் பிறப்பு. கருத்தரங்குகள், சுகாதாரப் பட்டறைகள் நடத்துவதில் அவர் கைதேர்ந்தவர். சிவராஜா பதவிகளையும் பாராட்டையும் நாடாதவர். தெய்வத்தில் நம்பிக்கையுள்ளவர். ஆன்மிகத்தின் ஆணையில் செயற்படுபவர் அப்படியானவர்கள் மலிவான பாராட்டுக்களை எதிர்பார்ப்பதில்லை.

**பேராசிரியர் 'நந்தி' செ.சிவஞானசுந்தரம்**

***மருத்துவர் சிவராஜா தொடர்பில் பேராசிரியர் அமரர் நந்தி எழுதிய இந்தப் பத்தி. சிவராஜாவின் நினைவாக தற்போது பிரசுரமாகிறது.***

## தவக்கால தியானங்கள்

### பிறரன்பே இறையன்பு

எவ்வளவு தூரத்தில் உன் அயலானை விட்டு விலகி இருக்கின்றாயோ அவ்வளவு தூரத்தில் தான் இறைவனும் இருப்பார். காரணம் இறைவனும் உன் அயலான்தான். ஏனெனில் பசியாய், தாகமாய், அந்நியனாக, ஆடையின்றியும், நோயுற்றும் சிறையில் தனிமையில் வாடியும் உன் அயலான் வடிவில் நான் வலம்வந்த எத்தனையோ சந்தர்ப்பங்களில் நீ என்னைக் கண்டுகொள்ளவில்லை.

மாறாக உன் புகழுக்காகவும் சுயமதிப்பை உயர்த்தவும் சமூகத்தில் வசதிபடைத்தோராகக் காட்டிக் கொள்ளவும் இன்ப, துன்ப நிகழ்வுகள், விழாக்களில் பணத்தை வளங்களை வீண் விரயம் செய்தாய். சின்னஞ்சிறு சகோதரர்கள், அயலவர்கள் பல்வேறு தேவைகளை எதிர்பார்த்து ஏங்கி நிற்க இந்தச் சிறியோரில் என்னைக் காண முயற்சிக்காது உன்னையே முன்னிலைப்படுத்தும் காரியங்களில் கவனம் செலுத்தினாய். எனவே சபிக்கப்பட்டவர்களே என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள் என்கிறார் ஆண்டவர். எதை உண்போம் எதை உடுத்துவோம் என்ற மிதமிஞ்சிய வாழ்வில் திளைப்போருக்கே விருந்தளிப்பை விடுத்து தேவைகளை வெளிப்படுத்த முடியாது தயங்கி மறைந்து வாழ்வோரை இனங்கண்டு வலதுகை கொடுப்பதை இடது கை அறியா வண்ணம் உதவிட முனைவோம். அவர்களின் மகிழ்வில் இறைவனைக் காண்போம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.




## வீரம் செறிந்த மண்ணில் நின்று உரிமைக்கு குரலெழுப்பும் நிலை

*சட்டத்தரணி ச.விஜயராணி தெரிவிப்பு*

கிளிநொச்சி, மார்ச் 11

எமது இனமானம் காத்த காவிய நாயகிகள் வாழ்ந்த வீரம் செறிந்த இந்த மண்ணில் நின்று பெண் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்றோம். பெண்களுக்குரிய உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றின் சட்டத்தரணி விஜயராணி சதீஸ்குமார் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழ் தேசிய பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகளில் தெரிவித்தார்.

'வையகம் நோக்கிய வனிதையர் குரல்' எனும் தொனிப்பொருளில் பன்னாட்டு மகளிர் தினம் கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகர் பசுமைப் பூங்காவில் பகல் ஒரு மணியளவில் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் சி.கலைவாணி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றின் சட்டத்தரணி ச.விஜயராணி உரையாற்றும்போது மேற்படி தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019ஆம் ஆண்டில் நாம் இப்போது காலடியெடுத்து வைத்துள்ளோம். இப்போதைய காலகட்டத்தில் பெண்கள் சகல துறைகளிலும் வளர்ந்து விட்டார்கள்.

ஆனாலும் அவர்களுக்குரிய இடம் என்பது தற்போதும் இல்லை என்றுதான் கூற வேண்டும். பெண்ணுரிமைகள் பற்றி பேசும் ஆண்கள் பெண்களுக்காகக் குரல் கொடுக்க முன்வர வேண்டும். மனித நாகரிக வளர்சியின் காரணமாக பெண்களுக்குரிய உரிமைகள், நிலைகள் என்பனவும் வேறுபட்டுச் செல்கின்றது - என்றார்.

நிகழ்வில், முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், பருத்தித்துறை நகரசபையின் உபதவிசாளர் திருமதி மதினி நெல்சன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணி திருமதி விஜயராணி சதீஸ்குமார், மதிப்புறு விருந்தினர்களாக கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் செல்வி அன்ரனி சாந்தாமரியாம்பிள்ளை, கிளிநொச்சி மகாவித்தியாலய பிரதி அதிபர் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சு.பசுபதிபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர். (க-426)

மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து

# அதிபர்கள், ஆசிரியர்கள் 13ஆம் திகதி கவனவீர்ப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 11*

மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களிலும் நாளை மறுதினம் புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளனர்.

இதற்கான அழைப்பினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் சரா.புவனேஸ்வரனும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலினும் கூட்டிணைந்து அழைப்பு விடுத்துள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில், கடையடைப்புக்கள் காலத்தின் தேவை கருதி நடைபெறுகின்றன. அவற்றுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்று எமது ஆதங்கங்களையும், அநீதிகளையும் உலகுக்கு எடுத்துக்காட்டுகின்றோம்.

அதன் ஒரு செயற்பாடாக கடந்த 25ஆம் திகதி அன்று நடைபெற்ற வடக்கு மாகாணம் தழுவிய காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டத்தில் நாம் முழுமையாக பங்குகொண்டோம். அவ்வாறே அடக்குமுறைகளுக்கும், அநீதிகளுக்கும் எதிரான போராட்டங்களுக்கு நாம் முழுமையான ஆதரவையும் வழங்கி வருகின்றோம்.

அதேபோன்று குறைந்த வேதனங்களோடு பணியாற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் தமது வேதனங்கள் அதிகரிக்கப்படவேண்டும் எனவும், அவசியமற்ற சுமைகள் நீக்கப்பட வேண்டும்எனவும், கொழும்பு அரசு கல்விக்காக ஒதுக்கும் நிதி போதுமானதாக இல்லை எனவும் பல போராட்டங்களை முன்னெடுத்தும் எந்தப் பயனும் இல்லை.

மாறாக எதிர்வரும் நாளை மறுதினம் ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பளத்தை உயர்த்துதல். ஆசிரியர்கள் மீது செலுத்தப்படும் தேவையற்ற நெருக்கீடுகளை அகற்றுதல். மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக 6 வீதம் ஒதுக்குதல் ஆகிய மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் இடம்பெறவுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்குச் சென்று காலை 8 மணி தொடக்கம் 8.30 மணி வரை கைகளில் கறுப்புப் பட்டி அணிந்து பாடசாலை நுழைவாயிலில் அமைதியாக ஒன்றுகூடி தமது கவனவீர்ப்பை வெளிப்படுத்தி, அன்றைய நாள் முழுவதும் கறுப்புப் பட்டியுடன் கடமையில் ஈடுபடுவது எனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அனைத்துத் தொழிற்சங்கங்களையும் ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். என்று உள்ளது. (ஐ)



மதியாமடு விவேகானந்த வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபன் "உடல் உள ஆரோக்கிய திட்டத்தின் கீழ் 2 கரம்போட் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார். (க-222)

## திறனாய்வு போட்டிகள்

மருதங்கேணி, மார்ச் 11

யாழ்ப்பாணம் மருதங்கேணி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான திறனாய்வு போட்டிகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் கடந்த 7ஆம் திகதி காலை 8.30 மணியளவில் நடைபெற்றன.

கோட்டக்கல்வி பணிப்பாளர் ச.திரவியராசா தலைமையில் இடம்பெற்ற போட்டிகளில் 19 பாடசாலைகள் கலந்து கொண்டன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக் கல்வி பணிப்பாளர் இ.தமிழ்மாறன் கலந்துகொண்டார்.

இந்தப் போட்டிகளில் முதலாம் இரண்டாம் நிலைகளில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் வலய மட்ட போட்டிகளில் பங்குபற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-160)



## சங்கநாதம் கலாமன்றம் தெரிவு

முல்லைத்தீவு, மார்ச் 11

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட வள்ளுவர்புரம், மாணிக்கபுரம் பகுதி கலைஞர்களை ஊக்கிவிக்கும் நோக்கில் சங்கநாதம் என்ற பெயரில் கலாமன்றம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

போருக்கு முன்னர் வாழ்ந்த கலைஞர்களை ஊக்கிவிக்கும் நோக்கிலும், புதிய கலைஞர்களை வளர்த்து கிராம மட்ட கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்தும் செயற்பாடாக இந்தக் கலாமன்ற தெரிவு அமைந்துள்ளது.

இரண்டு கிராம கலைஞர்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கலாசார அலுவலர்கள் ஆகியோர் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இனிவரும் காலங்களில் கலையினை வளர்த்துக்கொள்ளவும், கலைஞர்களுக்கு முகவரி கொடுக்கும்விதமாகவும் இந்தச் சங்கநாதம் கலாமன்றம் செயற்படும் என கலாமன்ற குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரிதீ)



## மாந்தை மேற்குப் பிரதேசத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள்

மன்னார், மார்ச் 11

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேசச் செயலர் பிரிவில் பல்வேறு வேலைத்திட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஊடாக இந்தத்திட்டம் முன்னெடுக்கப் பட்டது.

சுமார் 2.1 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் கற்பக விநாயகர் ஆலயம், ஈச்சலவக்கை மீனாட்சி அம்மன் ஆலயம், பெரியமடு கிறிஸ்து அரசர் ஆலயம், விடத்தல் தீவு அடைக்கல மாதா ஆலயம் போன்றவற்றின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப் பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் இணைப்பாளர் ப.மதன், மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், தொழில்நுட்ப அலுவலகர், மாந்தை மேற்கு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-56)

## இறப்பு வீட்டில் டொலர் திருட்டு சந்தேகத்தில் உறவினர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் இடம்பெற்ற ஆசிரியரின் இறப்பு வீட்டுக்குள் புகுந்த உறவுக்காரர் ஒருவர், 6 ஆயிரத்து 500 அமெரிக்க டொலரைக் களவாடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சியில் வசித்த பிரபல ஆசிரியை ஒருவர் கடந்த 2ஆம் திகதி உயிரிழந்தார். இவரது பிள்ளைகள் வெளிநாட்டில் வசிக்கும் நிலையில் ஆசிரியரின் உடல் 5 நாள்களாகப் பாதுகாக்கப்பட்டு 6ஆம் திகதியே இறுதிக் கிரியைகள் இடம்பெற்று தகனக் கிரிகை இடப்பெற்றது.,

இறுதிக் கிரியை இடம்பெற்ற 6 ஆம் திகதி உற்றார் , உறவினர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். உடல் எடுக்கும் சமயம் பலரும் அதன் மீது கவனமாக இருந்துவிட்டனர். பின்னர் அவதானித்த சமயம் பூசை அறையில் வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் இருந்து வந்தவர்களின் பயணப்பை கத்தியால் வெட்டி பிரிக்கப்பட்டிருந்தது. பையில் வைத்திருந்த 6 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் காணாமல் போயிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு வீட்டுக்கு பலரும் வந்த நிலையில் அதனை பொலிஸ் நிலையத்தில் முறையிடுவது உறவுகளைக் கொச்சைப்படுத்துவதாக அமையும் என எண்ணி, ஆரம்பத்தில் பொலிஸில் அவர்கள் முறையிடவில்லை ஆனால் சிறுமியின் தங்கச் சங்கிலியை அறுத்த குற்றச்சாட்டின் வழக்கு இடம்பெறும் நபர் அங்கே நடமாடியிருந்ததால் அவர்மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அந்த நபர் பூசை அறைக்குள் நடமாடியதனை ஓர் சிறுவன் அவதானித்துள்ளான் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகத்தின் அடிப்படையில் அவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-105)

## மகளிர் தினத்தில் மதிப்பளிக்கப்பட்ட 94 வயது மூதாட்டி

வவுனியா, மார்ச் 11

வவுனியா குட்சைட் வீதியிலுள்ள வெ. தெய்வானை மகளிர் தினத்தன்று தனது 94ஆவது பிறந்த தினத்தை கொண்டாடியுள்ளார். இதையடுத்து தமிழ் விருட்சம் அமைப்பினரால் அவருக்கு மதிப்பளிக்கப் பட்டுள்ளது.

தனது 94ஆவது பிறந்த தினத்தையொட்டி கணவனை இழந்த பெண்தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு ஈருருளி ஒன்றினை வழங்கிவைத்துள்ளார்.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் அவருக்கு பொன்னாடைபோர்த்தி மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டது. (க)



# போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தில் பொலிஸாருடன் முப்படையினரும்

## ஏப்ரல் 3 இல் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 11

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதியின் பின்னர் பொலிஸாருடன் முப்படையினரும் பலமான பங்களிப்புகளை வழங்கவுள்ளனர் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இளையோரை போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பங்காளர்களாக ஆக்கிக்கொள்வதற்கு நாடுமுழுவதும் ஆரம்பிக்கப்படவுள்ள 'சுஜாத தருவோ' (கண்ணியமான பிள்ளைகள்) நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஆளுநர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இதன்போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் போதைப்பொருள்களுக்கு எதிராக முழு நாடும் உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு ஏப்ரல் 3 ஆம் திகதி காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் பாதாள உலகத்தினருக்கும் இந்த நாட்டில் தனியானதொரு அரசை நடத்திச் செல்ல இடமளிக்க முடியாது. போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் பாதாள உலகத்தினரைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அரசியல் கட்சி பேதமின்றி அனைவரும் கைகோர்க்க வேண்டும்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படும் கப்பம் பெறும் நடவடிக்கைகள் தொடர்பில் எனது பணிப்புரையின் பேரில் பொலிஸார் தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர்.

பாடசாலைப் பிள்ளைகளின் கதிரை, மேசைகள் பற்றிய பிரச்சினை தொடர்பாக சிறப்புக் கவனம் செலுத்தப்படவுள்ளது. பாடசாலைப் பாடப் புத்தகங்களை வழங்குவதைப் போன்று வருடாந்தம் கதிரை, மேசைகளின் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு பணிப்புரை விடுத்துள்ளேன் - என்றார். நிகழ்வில் அமைச்சர் வஜிர அபேவர்தன, மாகாண ஆளுநர்கள், அரசதலைவரின் செயலர் உதய ஆர். செனவிரத்ன உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலர்கள், மாகாண தலைமை செயலர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)



# மலையகத்தில் 100 வீடுகள்

பதுளை, மார்ச் 11

இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் மலையக மக்களுக்காக நிர்மாணிக் கப்படவுள்ள 4ஆயிரம் தனி வீடமைப்பு வேலைத்திட்டத்துக்கமைய கடந்த வெள்ளிக்கிழமை காலை பதுளை வேவெஸ்ஸ தோட்டத்தில் 50 வீடுகளும், தெல்பெத்த தோட்டத்தில் 50 வீடுகளும் அடங்கலாக 100 தனி வீடுகளுக்கு அடிக்கல் நடும் வைபவம் நடைபெற்றது.

மலைநாட்டுபுதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக இந்த வைபவத்தில் 100 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

# ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 11

ஹப்புத்தளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றை அடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார், ஹப்புத்தளை தொடருந்து நிலையத்தின் ஊழியராக இருந்து வரும் 32 வயதுடைய நபரை கடந்த வெள்ளிக்கிழமை பரிசோதனை செய்த போது, அவரிடமிருந்து 30 மில்லி கிராம் எடையுடன் கூடிய ஹெரோய்ன் போதை பொருளைக் கைப்பற்றியதுடன், அந்த நபரையும் கைது செய்தனர்.

அவர் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது, இந்த நபர் தொடருந்துப் பயணிகளுக்கும், பகுதி நேரத்தில் முச்சக்கரவண்டி செலுத்துவதால், அதில் பயணிக்கும், வெளிநாட்டு உல்லாச பயணிகளுக்கும் நீண்டகாலமாக ஹெரோய்ன் போதைப் பொருளை விற்பனை செய்து வருவதும் தெரிய வந்துள்ளது. தொடர்ந்தும் இவரைப் பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட 30 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள், போதை தரக் கூடிய இனிப்பு வகைகள், கையடக்கத் தொலைபேசி 'சிம்' காட்டுகள், கையடக்கத் தொலைபேசி ஆகியனவற்றையும், ஹப்புத்தளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (க)

# முன்மொழிவைத் தாருங்கள் இயன்றளவு அமைக்கிறோம்

## தென்மராட்சி தொழிற்சாலைகள் தொடர்பில் சுமந்திரன் தெரிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 11



தென்மராட்சியில் 12 வகையான பழவகைகளின் உற்பத்தி இடமாக இருக்கின்ற போதிலும் பலர் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய தொழிற்சாலைகள் இல்லாதமை வேதனையளிக்கிறது. 60 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள இங்கு, குறைந்தது 20 தொழிற்சாலைகளை அமைப்பதற்கான முன்மொழிவுகளை முன்வையுங்கள் எங்களால் முடிந்தவரை அவற்றை நிறைவேற்ற நாம் பாடுபடுவோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதேச பொது அமைப்புக்கள், ஆலய பரிபாலன சபைகள், பாடசாலைகளின் அதிபர்கள், முன்பள்ளிகளின் நிர்வாகிகள் போன்றோருக்கான கலந்துரையாடல் தென்மராட்சிக் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 'பனை நிதியம்' திட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்மராட்சியில் இளையோர் வேலைவாய்ப்புத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். இங்கேயே வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையிலான செயற்றிட்டங்களை முன்மொழியுங்கள்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கென 5 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை உரிய முறையில் பயன்படுத்தி எமது பிரதேசத்தில் படித்த ஆற்றலுள்ள இளையோருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி வெளிநாடுகளுக்குச் செல்லும் அவர்களது திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களை 2 வருடங்களில் அபிவிருத்தி செய்யவென்று வரவு செலவுத் திட்டத்தில் 5 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எட்டு உறுப்பினர்கள் அடங்கிய செயலணி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் கிராமத்துக்கும் மக்களுக்கும் பயன்படக்கூடிய திட்டங்களுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பியுங்கள்.

இந்த அரசு எத்தனை காலங்களுக்கு இருக்கும் என்பது தெரியாது. இவ்வருட இறுதிக்குள் அரச தலைவர் தேர்தல் நடத்தப்படவேண்டும். அரசியல் தீர்வை முன்னெடுக்கும் நிலையில் எமது பகுதி அபிவிருத்திகளும் அவசியமெனக் கருதி இரண்டையும் சமகாலத்தில் ஒரே நேரத்தில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். கிடைக்கும் நிதியில் வீதிகள், குளங்கள், பாடசாலைகள், முன்பள்ளிகள், கோவில்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றைச் சீரமைக்க 180 மில்லியன் ரூபாவும், மிகுதி 20 மில்லியன் ரூபா கூரைவசதிகள், மின்சாரம் இல்லாத குடியிருப்புகளுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (த-9)

# தண்ணீர் வசதி மிக விரைவில்

*அமைச்சர் ஹரின் உறுதி*

பதுளை மார்ச் 11

வெலிமடை 'டயரபா' பெருந்தோட்டத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தபோதிலும், உமாஓயாத் திட்டத்தின் மூலம் குறிப்பிட்ட தோட்டத்துக்குத் தண்ணீர் வழங்குவதாகக் கூறி, அந்தத் திட்டம் தடுக்கப்பட்டது. இன்று வரை உமாஓயாத்திட்டத்தால் எமது மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படவில்லை.

இவ்வாறு பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

பதுளை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஹாலிஎலை வெளிநாட்டுப் பணியகக் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ஹரின் பெர்னான்டோ, விரைவில் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (து)

# அரச தலைவர் தலைமையில் பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு





கொழும்பு, மார்ச் 11

"திறமையான பெண்கள் - அழகான உலகம்" என்ற கருப்பொருளில் பன்னாட்டு மகளிர் தினம் அநுராதபுரம் சல்காது விளையாட்ட ரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தி னராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.

2019 ஆம் ஆண்டு பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ள பிரகடனம் இதன்போது அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது. (222)

# கடன் வழங்க சீனா பின்னடிப்பு

## சரத் அமுனுகம கவலை

கொழும்பு, மார்ச் 11

இலங்கைக்குக் கடன் வழங்குவதற்கு முன்புபோல சீனா தயாராக இல்லை என்று முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை அரசுக்கு கடன்களை சீனா துரிதமாக வழங்கியது. தற்போது, சீனா கடன்களை வழங்க தாமதிக்கிறது. மேலதிக நிபந்தனைகளையும் விதிக்கிறது. இதற்கு முதன்மைக் காரணம், தற்போதைய அரசு சீனாவை விமர்சித்தமையே.

இலங்கையின் கடன் சுமைக்கு சீனா காரணம் அல்ல. சீனாவை விட ஜப்பானிடம் இருந்தே அதிக கடன்களை இலங்கை பெற்றிருக்கிறது என்று தெரிவித்துள்ளார். (கு)

# பன்னாட்டு நிறுவனங்களை திருப்திப்படுத்தும் பாதீடு!

## அத்துரலிய ரத்னதேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 11

பன்னாட்டு நிறுவனங்களைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே 2019ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டை நாமே உருவாக்கிக் கொள்ள வாய்ப்புகள் இருந்தும் அதனைக் கருத்திற் கொள்ளாது வெளிநாட்டு நலன்சார் வரவு-செலவுத் திட்டத்தையே ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ளது. இத்தனை காலமாக மகிந்த ராஜபக்ச ஆட்சியை நாம் விமர்சித்தோம். ஆனால் இந்த அரசும் அதே பாதையில் தான் பயணித்து நாட்டை நாசமாக்கி விட்டது. நாம் மீளச் செலுத்த முடியாத அளவுக்குக் கடன் பெறப்பட்டு விட்டது. கடன் சுமை 84 வீதமாக அதிகரித்துள்ளது.

தோட்டத்தொழிலாளர் பிரச்சினையை எடுத்துப்பார்த்தால் அவர்களின் வாழ்க்கை மிகவும் மோசமானதாக அமைந்துள்ளது. அவர்களின் லயன் வீடுகளை நீக்கிவிட்டு பாதுகாப்பான வீடுகளை உருவாக்கிக்கொடுக்க வேண்டும்.

150 ஆண்டுகளுக்கு முன்னர் நடுகை செய்யப்பட்ட தேயிலைச் செடிகள் தான் இன்றும் உள்ளன. அதனைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த அரசு மிகவும் மோசமானது.

அரசதலைவர் தேர்தலை இலக்கு வைத்தே ஐக்கிய தேசியக் கட்சி வரவு செலவுத் திட்டத்தை இப்பொழுது முன்வைத்துள்ளது.

இந்த ஆட்சியில் அனைத்துமே தனியார் மயப்படுத்தப்பட்டு விட்டன. இந்த ஆட்சிக்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்து விட்டனர். தனியார் மயப்படுத்தல் என்பது ஐக்கிய தேசிய கட்சி மட்டும் அல்ல சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் காலத்திலும் இடம்பெற்றது.

முன்னாள் அரசதலைவர் சந்திரிகா குமாரணதுங்கவின் ஆட்சியில்.தான் தொழிற்சாலைகள் பல தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் எவருடனும் நாட்டை முன்னெடுத்துக் கொண்டுசெல்ல முடியாது. சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து உடன்படிக்கை மூலமாக நாட்டை விற்றுவிட்டனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

## சப்ரகமுவ மாகாணத்திலிருந்து வடக்குக்குத் தண்ணீர் வசதி

### வடக்கு ஆளுநர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 11

சப்ரகமுவ மாகாணத்திலிருந்து வடக்குக்குத் தண்ணீரைக் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுகிறது என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கூறியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஆளுநர் இதனைக் கூறியுள்ளார். சப்ரகமுவ மாகாணத்திலிருந்து நிலத்துக்குக் கீழாக குழாய் மூலமாகத் தண்ணீரைக் கொண்டுசெல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்குப் பலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார் என்றும் ராகவன் மேலும் கூறியுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து தண்ணீர் கொண்டுவர கிளிநொச்சியிலுள்ளவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையில் ஆளுநர் இவ்வாறு கூறியுள்ளார். (த)

## இந்தியாவுடன் இணைந்து மத்தளவை இயக்கப் பேச்சு

கொழும்பு, மார்ச் 11

மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவின் வானூர்தி நிலைய அதிகார சபையுடன் இணைந்து செயற்படுத்துவதற்கான, இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பேச்சு நடத்த அமைச்சரவை அனுமதியளித்துள்ள நிலையில், இந்தத் திட்டம் குறித்து இந்திய அரசு நியமித்த அதிகாரிகளுடன் பேச்சு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மத்தள வானூர்தி நிலையத்தை இயக்குவதற்காக இந்திய வானூர்தி நிலைய அதிகார சபை முன்வைத்த யோசனையை நடைமுறைப்படுத்தல் என்ற தலைப்பிலான அமைச்சரவைப் பத்திரம், கடந்த புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மங்கள சமரவீர, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் இணைந்து இந்த அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தனர்.

அமைச்சரவை நியமித்த குழு இலங்கை அரசின் சார்பில், இந்திய அரசு நியமித்த அதிகாரிகளுடன் முறைப்படியான பேச்சு நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சு மூலமாகவே, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உடன்பாடு இறுதி செய்யப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## தீட்டப்படாத ரத்தினக் கற்களை தீட்டி ஏற்றுமதி செய்யத் திட்டம்

கொழும்பு, மார்ச் 11

இரத்தினக்கற்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து தீட்டி மீள் ஏற்றுமதி செய்யும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக இரத்தினக்கற்கள் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை கூறியுள்ளது.

அதன் தலைவர் ரெஜினோல்ட் குரே இந்தப் புதிய வேலைத்திட்டம் தொடர்பாகத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற தீட்டப்படாத இரத்தினக்கற்களை இலங்கையில் மேம்படுத்துவதன் ஊடாக பெருமளவான வருமானம் ஈட்ட முடிகிறது என்றும் அவர் கூறியுள்ளார். (த)

## படையினருக்குப் பெரும் நிதி தமிழர்களுக்கு ஒன்றுமில்லை

### டக்ளஸ் எம்.பி. ஆதங்கம்

இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் படையினருக்கு பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஒன்றும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினரும் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் படையினருக்கும், அவர்களின் சேம நலன்களுக்குமே பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள் என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், சமூகத்தில் பல துயரங்களைச் சுமந்து வாழும் அனைத்து முன்னாள் தமிழ் போராளிகளுக்கும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எவ்விதமான உதவிகளும் முன்மொழியப்படவில்லை.

படையினரின் நலன்களுக்கும் அவர்களின் குழந்தைகளின் எதிர்காலம் என்றெல்லாம் சிந்தித்த அரசும், அதற்கு முண்டு கொடுப்பவர்களும் போர்ப் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வடக்கு, கிழக்கில் வாழும் அங்கவீனமானவர்களையும், அநாதரவானவர்களையும், கைம்பெண்களையும் சிந்தித்துப் பார்க்கவில்லை.

இவ்வாறு தமிழ் மக்களைத் தோற்கடிக்கப்பட்டவர்களாகவும், இரண்டாந்தர மக்களாகவும் நடத்தும் அரசால் எவ்வாறு இனங்களுக்கிடையே உண்மையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்? என்றுள்ளது. (க)

## அ.இ.ம. காங்கிரஸ் மத்திய குழு தெரிவு

மூதூர், மார்ச் 11

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி எல்லோருக்கும் பொதுவான கட்சி, இன மத பேதமற்ற எல்லோரையும் அரவனைக்கும் கட்சி என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறைப் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார். மூதூர் கிழக்கு பள்ளிக் குடியிருப்பில் நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய குழு தெரிவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபிவிருத்தியிலும் சரி எந்த விதமான முன்னெடுப்புக்களிலும் சரி தமிழ், முஸ்லிம், சிங்கள இன மத பேதமற்ற சேவைகள் எமது கட்சியால் தொடர்ந்து கொண்டே இருக்கிறன.

சமூக நலனுக்காக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி பாடுபடுகிறது. தேசிய மட்டத்தில் ஜனநாயகத்தைப் பாதுகாத்த பெருமை இந்தக் கட்சிக்கே உரித்தானது - என்றார். (த)

## இலவச வை-பை பாவிப்போர் 4 1/2 லட்சத்தைத் தாண்டினர்!

கொழும்பு, மார்ச் 11

நாட்டில் பொது இடங்களில் வழங்கப்படும் இலவச வைபை வசதியைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன்படி இந்த எண்ணிக்கை நான்கரை இலட்சத்தைக் கடந்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இந்தச் சேவை அறிமுகப்படுத்தப்பட்ட நாள் தொடக்கம் இதுவரை சுமார் 80 ஆயிரம் ஜிபி அளவு தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று தலைமை அமைச்சர் அலுவலகக் கொள்கை அபிவிருத்திப் பிரிவு அறிவித்துள்ளது.

இலவச வைபை திட்டத்தின் கீழ் ஆயிரத்து 176 இடங்களில் வைபை வசதி வழங்கப்படுகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## கணவனை விரைவில் விடுவிக்காவிடில் மைத்திரி அலுவலகம் முன் நஞ்சருந்துவேன்

### தடுப்பிலுள்ள முன்னாள் போராளியின் மனைவி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 11

தனது ஐந்து பிள்ளைகளுடன் அரசதலைவர் அலுவலகம் அல்லது பொலிஸ் நிலையம் முன்பாக நஞ்சருந்தும் நிலை ஏற்படும் என்று, பொலிஸ் அலுவலர்கள் இருவர் கொல்லப்பட்ட வழக்கில் சந்தேகநபராகத் தடுப்பிலுள்ளவரான அஜந்தனின் மனைவி செல்வராணி தெரிவிக்கிறார்.

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலையறவு பொலிஸ் சோதனைச் சாவடியில் கடந்த டிசெம்பரில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அலுவலர்கள் இருவர் கொல்லப்பட்டிருந்தனர்.

அந்தக் கொலையில் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அதே இடத்தைச் சேர்ந்தவரும் முன்னாள் போராளியும் தற்போது 'தேசத்தின் வேர்கள்' அமைப்பின் உறுப்பினருமாகிய அஜந்தன் என்பவரைக் கைது செய்திருந்தனர். அவர் அரசதலைவரின் சிறப்பு அனுமதியின் பேரில் 90 நாள்கள் பொலிஸ் தடுப்பு விசாரணையில் உள்ளார். இது தொடர்பில் செல்வராணி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

எனது கணவன் கொலைச்சம்பவத்துடன் தொடர்பு என்று கூறி கைதுசெய்தனர். அவர் ஒரு நிரபராதி. 90 நாள்கள் தடுத்து விசாரிப்பதற்கு அரசதலைவர் அனுமதி வழங்கியிருந்தார். அது கடந்த 4 ஆம் திகதி முடிவடைந் துள்ளது. கடந்த 5 ஆம் திகதி நீதிமன்றில் அவரை முற்படுத்துவதாகக் கூறியிருந்தனர். அது நடக்கவில்லை.

மீண்டும் ஒருமாத காலப்பகுதி தடுப்பு விசாரணைக்கான காலக்கேடு நீடிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். ஆனால் எழுத்து மூலமாக எதுவும் தரவில்லை. மனித உரிமைகள் ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்கு அறிவித்துள்ளேன். எனது கணவரின் விடுதலை குறித்து பன்னாடுகளே கவனத்தில் கொள்ள வேண்டும். இல்லையேல் எனது ஐந்து பிள்ளைகளுடன் நஞ்சருந்தும் நிலையே ஏற்படும் - என்றார். (த)

## 6 வெளிச்ச வீடுகள் இந்த வருடத்துள் திருத்தப்படும்

### சாகல தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 6 வெளிச்சவீடுகள் இந்த வருட இறுதிக்குள் சீரமைக்கப்படவுள்ளன. அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன என்று துறைமுக மற்றும் கப்பற்றுறை அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்துள்ளார். வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதம் நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். (த)

# தமிழரின் போராட்டங்களே ஐ.நா. அறிக்கைக்கு காரணம்

## கூறுகிறார் விக்னேஸ்வரன்

கிளிநொச்சி, மார்ச் 11

மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றாமல் பல்வேறு ஏமாற்று வழிமுறைகளை இலங்கை அரசு கையாண்டு வந்த நிலையில் அவற்றுக்கு எதிராக தொடர்ச்சியாக உண்மை நிலமைகளை எடுத்துக்கூறி நீங்கள் மேற்கொண்ட போராட்டங்களும் அரசியல் செயற்பாடுகளுமே ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சில சாதகமான விடயங்கள் உள்ளடக்கப்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனை, ஆனந்தபுரத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள் ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் சமூக மேம்பாட்டுக் கட்டமைப்புக்களின் தலைமையகமாகவும் தமிழர்களின் அரசியல் கோட்டையாகவும் கோலோச்சிய கிளிநொச்சி மாநகரம் தொடர்ந்தும் கொள்கை வழி நின்று, இனவாத சக்திகளினதும் அதற்குத் துணைபோகும் தரப்புகளினதும் சதிவலைகளை முறியடித்து மண்ணின் மகத்துவத்தைக் காத்து, தமிழ்த் தேசிய விடுதலையை முன்னெடுப்பதில் முன்னுதாரணமாக நீங்கள் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையிலேயே கிளிநொச்சியில் இந்தப் பணிமனை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் பேரவையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உள்பட சம்பந்தப்பட்ட பல தரப்புக்களுக்கும் நாம் அனுப்பிய தீர்மானத்தில் சில விடயங்களை உள்ளடக்கியிருந்தோம். இவை ஐ.நா. ஆணையரின் அறிக்கையில் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் பரிந்துரைகளை நாம் வரவேற்கிறோம். அதேவேளை, இலங்கை விடயத்தை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல வேண்டும் என்றும் நாம் எமது தீர்மானத்தில் வலியுறுத்தி இருக்கின்றோம். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை இலங்கை நிறைவேற்றுவதற்குத் தவறி இருக்கும் நிலையில் இந்த விடயத்தை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தை வெளிநாட்டு நீதிபதிகள் ஆணைக்குழுவும் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.



இலங்கை விடயம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் எனப் பல தமிழ்க் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. எமது இந்த வலியுறுத்தல்கள் நடைமுறைக்கு வரும் வகையில் இங்குள்ள தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழ் மக்களும் தமது அரசியல், ராஜதந்திர செயற்பாடுகளை வகுத்து செயற்பட வேண்டும் - என்றார். (ஒ.5)

## பொரளை போக்குவரத்து ஓ.ஐ.சி. சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 11

விபத்தில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பொரளை பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி சரத் சந்திர (வயது - 51) நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பொறுப்பதிகாரி கடந்த 24ஆம் திகதி பம்பலப்பிட்டிப் பகுதியில் உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்தபோது, டிபெண்டர் வாகனம் ஒன்று மோதியது. இவர் மீது மோதிய டிபெண்டர் வாகனம் அந்தப் பகுதியிலிருந்து தப்பிச் சென்றிருந்தது.

இந்தச் சம்பவத்தையடுத்து, டிபெண்டர் வாகனத்தின் சாரதி உள்ளிட்ட 8 பேர் கைதுசெய்யப்பட்டனர். சாரதி மட்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஏனைய 7 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களுள் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேயின் மகனும், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சுமிந்த ஆட்டிகலவும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## அமெரிக்காவுக்குப் பயணமாகும் இலங்கைத் தாதியர்கள்

கொழும்பு, மார்ச் 11

அமெரிக்காவிலுள்ள மருத்துவமனையில் பணியாற்றுவதற்கு இலங்கையில் இருந்து முதல் தடவையாக தாதி ஒருவர் பயணமாகியுள்ளார்.

இலங்கை தாதியர் சங்கத்தில் பதிவு செய்துள்ள கண்டிப் பொது மருத்துவமனையில் பணிபுரியும் நுவனி ரணசிங்ஹ என்பவரே கடந்த வியாழக்கிழமை தாதியர் சேவைக்காக அமெரிக்கா சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும் 25 தாதியர்கள் அமெரிக்கா செல்வதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கன் நிறுவனத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கைச்சாத்திட்ட உடன்படிக்கைக்கு அமைவாக 3 ஆயிரம் பேருக்கு இந்த வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையில் தாதியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,21)

## ஹெரோய்ன் வைத்திருந்த சந்தேகத்தில் முதியவர் கைது



வவுனியா, மார்ச் 11

வவுனியா ஓமந்தையில் ஹெரோய்ன் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் முதியவர் ஒருவரைக் கைது செய்துள்ள்தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் உந்துருளியில் பயணித்த, இரும்பு வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவரை மறித்துப் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். அவரிடமிருந்து 45 மில்லிகிராம் ஹெரோய்னை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,110)

## இந்தியச் சுற்றுலாவிகள் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 11

தமிழகத்திலிருந்து சுற்றுலா நுழைவிசைவில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் யாழ்ப்பாண நக்ரப் பகுதியில் தங்க முலாம் பூசப்பட்ட நகைகளை விற்பனை செய்துள்ளனர். அவர்களிடம் சிறப்பு அதிரடிப் படையினர் விசாரணை நடத்தினர். அவர்கள் சுற்றுலா நுழைவிசைவில் வந்தமை கண்டறியப்பட்டது. நுழைவிசைவு விதிகளை மீறிய குற்றச்சாட்டில் அவர்கள் இருவரையும் நேற்று முன்தினம் இரவு கைது செய்து, யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் நேற்று ஒப்படைத்துள்ளனர். (ஒ.5,106)

## சொந்த செலவில் சூனியம் !

கொழும்பு, மார்ச் 11

வெல்லவாயவில் ஒருவர் தம்படம் (செல்பி) ஒன்றை முகப்புத்தகத்தில் பதிவிட்டிருந்தார். அதனைப் பார்வையிட்ட பொலிஸார் விசாரணை நடத்தி அவரைக் கைது செய்தனர்.

தம்படம் போட்டதற்கு கைதானமைக்கு அவர் செய்த காரியமே காரணம்.

அவர் எடுத்த படத்துக்கு பின்னால் அவர் செய்துவந்த கஞ்சா தோட்டம் தெரிந்துள்ளது. ஒரு ஆர்வக் கோளாறில் படத்தைப் போட்டு அவர் இப்போது கம்பி எண்ணுகின்றார். (ஒ.5)

## மூங்கிலாறு விபத்து 5பேர் காயம்

முல்லைத்தீவு, மார்ச் 11

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் மூங்கிலாறு சந்திப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் 5 பேர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பரந்தன் - புதுக்குடியிருப்பு முதன்மை வீதியில் ஏறிய முச்சக்கர வண்டி மீது வேகமாக வந்த உந்துருளி மோதி விபத்துக்குள்ளானதில் உந்துருளியில் பயணித்த இருவரும் முச்சக்கர வண்டியில் பயணித்த மூவரும் காயமடைந்துள்ளார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்துத் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ.5,ரி3)

## கிளி. மருத்துவமனை விடுமுறை நாள்களில் மதியம் வரை திறப்பு

கிளிநொச்சி, மார்ச் 11

பொது மக்களின் நலன் கருதி கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு, ஞாயிறு உள்ளிட்ட விடுமுறை நாள்களில் மதியம் 12 மணி வரை திறக்கப்பட்டிருக்கும் என்று பணிப்பாளர் காண்டீபன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் விடுமுறை நாள்களில் காலை பத்து மணி வரையே வெளிநோயாளர் பிரிவில் பொது மக்கள் சிகிச்சை பெற்று வந்தனர். பெருமளவான மக்கள் சிகிச்சையைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

பொது மக்களின் கோரிக்கைக்கு அமைவாக மதியம் 12 மணி வரை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க,214)

## சி.ஐ.டியில் முன்னிலையாகிறார் அட்மிரல் வசந்த கரன்னகொட

கொழும்பு, மார்ச் 11

பொலிஸாரின் கண்ணில் படாமல் தலைமறைவாக இருந்து வரும் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் இன்று முன்னிலையாகவுள்ளார்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில், 14 ஆவது சந்தேக நபராக சேர்க்கப்பட்டுள்ள அட்மிரல் வசந்த கரன்னகொட, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்யக்கூடும் என்ற அச்சத்தில் அவரது வீடுகளில் தங்காமல், மறைந்திருக்கிறார்.

தம்மைக் கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு தடை விதிக்கக் கோரி, அட்மிரல் கரன்னகொட உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்திருந்தார். அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அவரை 11ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகும்படியும் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவுக்கமைய, இன்று காலை 9 மணியளவில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகும்படி, அட்மிரல் கரன்னகொடவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஐ.நாவுக்கான பிரதிநிதியாக சேனுகா செனவிரத்ன?

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்துக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதியாக சேனுக செனவிரட்னவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், ஒன்பது நாடுகளுக்கான தூதுவர்களின் பெயர்களும் நாடாளுமன்ற உயர் பதவி குழுவின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

விரைவில் இதற்கான அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.5)

# நியமனப் பாடங்களை எவரும் மாற்றக்கூடாது

## கல்வி சார் அதிகாரிகளுக்கு கண்டிப்பான அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச்11

ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படும்போது அதில் குறிப்பிடப்படும்பாட வகுதிகளை மாற்றமுடியாது என்று கல்வி அமைச்சு கடுமையான அறிவுறுத்தல் விடுத்துள்ளது. இது தொடர்பில் அதிகாரிகள் தெளிவாக இருக்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சு அனைத்து கல்வி சார் அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பாடசாலைகளில் நிலவும் துறை சார்ந்த பாடங்களுக்கான வெற்றிடங்களை அறிந்தே மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளுக்கு ஆள்ச்சேர்ப்புச் செய்யப்படுகிறது. பாடங்கள் குறிப்பிடப்பட்டே வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறன. நியமனங்கள் வழங்கப்படும்போது அந்தப்பாடத்துக்கான ஆசிரியர் நியமனம் என்று குறிப்பிட்டு வழங்கப்படுகிறது. ஆகவே அந்தப் பாடத்தை மாற்றம் செய்ய முடியாது. நியமிக்கப்படும் பாடசாலைகளில் நிலவும் பாடத்துக்குஏற்ப அந்தப்பாடத்தை மாற்றுவதற்குமுயற்சித்தல்ஆசிரியரின் பாடத்துக்கான சமநிலையைக் குழப்பும். ஆகவே இது தொடர்பில் அதிபர்கள் உட்பட ஏனைய அதிகாரிகளும் அறிந்து கொள்ள வேண்டும்.

நியமிக்கப்பட்ட பாடசாலையில் வேறு பாடங்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டு அதைக் கற்பிக்கக் கூடிய சிறப்புத் திறமை ஆசிரியரிடத்தில் காணப்படும் போது அவர்கள் அந்தப் பாடத்தைக் கற்பிக்க முடியும்.

ஆனால் நியமனம் வழங்கப்பட்ட பாடத்தைமாற்றம்செய்வதுகல்வி முறைமையில் ஆசிரியர் சம நிலைதொடர்பில்எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்-என்றுள்ளது. (த-7)





# 312.5 கிலோ பீடி இலைகள் அனலைதீவுக் கடலில் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 312.5கிலோகிராம் பீடி இலைகள் யாழ்ப்பாணம் அனலைதீவுக் கடற்பரப்பில் மீட்கப்பட்டுள்ளன. 6 பொதிகளாக மிதந்து வந்த நிலையில் அவை நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன என்று வடக்குக் கடற்படைப் பிரிவு தெரிவித்தது.

அவை மேலதிக விசாரணை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணச் சுங்கத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கடந்த 7ம், 8ஆம் திகதிகளில் மன்னார் பேசாலையில் ஆயிரத்து 377.15கிலோக்கிராம் பீடி இலைகள் கடற்படையினரால் மீட்கப்பட்டிருந்தன.

இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் வடக்குக் கடற்படையினர் ஆயிரத்து 906.15 கிலோகிராம் பீடி இலைகளை மீட்டுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (த-105)

# அதிபர் நியமனத்தை நிறுத்துமாறு கடிதம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு கல்வி அமைச்சுக்கு அனுப்பியது

வவுனியா, மார்ச் 11

வுவுனியா ஓமந்தை மத்திய கல்லூரிக்கு அதிபரை நியமிக்க இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ள அதிபரின் நியமனத்தை இரத்துச் செய்யுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா அலுவலகம் பணித்துள்ளது.

மாகாண அதிபர் சேவை குறிப்புக்களின்படி 18ஆவது விடயமாக உள்ளடக்கப்படவேண்டிய விடயம் இதில் உள்ளடக்கப்படவில்லை. 4பேர் பங்கு பற்றிய நேர்முகத் தேர்வில் இருவர் மூன்று வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. அந்த இருவரில் ஒருவர் நிதி மோசடிக்குற்றச்சாட்டில் ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்பட்டவர். அவரை அதிபராக நியமனம் செய்வது தவறு என்று விசாரணைகளின்போது கண்டறியப்பட்டு இந்த நியமனத்தை இரத்துச் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலருக்கு அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதிபர் மேற்கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் நிதிமோசடி தொடர்பில் பொதுக் கணக்காய்வாளரால் வழங்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு அமைய மோசடி செய்யப்பட்ட நிதியை மீளப்பெற கல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்பட்ட அதிபருக்கு பதவி உயர்வு வழங்கியமை தொடர்பாக கல்வி அமைச்சு பக்கச் சார்பாக நடந்துகொண்டுள்ளது என்பதுடன் இவ்வாறான செயற்பாடுகள் இனிவரும் காலங்களில் தொடர்ச்சியாக இடம்பெறாமல் இருக்க வேண்டும் எனவும் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

ஓமந்தை மத்திய கல்லூரியின் அதிபர் நியமனத்துக்கு முறையான மாகாண அதிபர் சேவைப் பிரமாணம் குறிப்பிட்டு தகவல் விதிக்கோவையின் அவசியமான விடயங்களை உள்ளடக்குவதுடன் நிபந்தனைகளையும் உள்ளடக்கி விண்ணப்பத்தை மீண்டும் கோரி தகமை வாய்ந்த நபர்களை தெரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆணைக் குழு கல்வி அமைச்சுக்கு அனுப்பிய கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளது. (த-110)

# குறித்தொதுக்கப்பட்ட நிதியில் சிறிய திட்டங்களே சாத்தியம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு மாகாணத்தில் மாகாண குறித்தொ துக்கப்பட்ட நிதியில் இந்தமுறை சிறிய திட்டங்களையே நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் வருடாந்தம் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டு அதனூடாகப் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படும். ஆனால் அரசியல் குழப்ப நிலை காரணமாக மாகாண திறைசேரிக்கு இன்னமும் நிதி விடுவிக்கப்படவில்லை. கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் முடிவுறுத்தப்படாத நிலையில் உள்ளன. ஆகவே இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் கடந்த வருட வேலைகளை முடிவு றுத்திக் கொண்டு இந்த ஆண்டுக்கான திட்டங்களை வகுக்குமாறு மாகாணப் பிரதி முதன்மைச் செயலகம் அறிவித்துள்ளது. ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இந்த வருடத்துக்கான திட்டங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்என்றுதெரிவிக்கப்பட்டது. மே மாதம் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டாலும் ஜீன் மாதமளவில் வேலைகள் ஆரம்பமாகும். ஆகவே சிறிய வேலைகள் மட்டுமே காலம் மற்றும் நிதி நிலமைகளை வைத்துத் தயாரிக்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. வடக்கு மாகாணத்துக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியாக 3 ஆயிரத்து 169 மில்லியன் இந்த வருடம் ஒதுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சு அமைச்சு ஆயிரத்து 118 மில்லியன், விவசாய அமைச்சு 489 மில்லியன், கல்வி அமைச்சு 573 மில்லியன், சுகாதார அமைச்சு 620 மில்லியன், மகளிர் விவகார அமைச்சு 84 மில்லியன், சிறப்புத் தேவையுடைய கிராம அபிவிருத்தி 300 மில்லியன், ஏனை ய இணைச் செலவுகள் 85 மில்லியன் உட்பட 3 ஆயிரத்து 169 மில்லி.ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (கு-7)

# வட்டி கொடுக்காததால் வீடு புகுந்து தாக்குதல்!

## வவுனியா பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, மார்ச்.11

வவுனியாவில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் நபர் ஒருவர் அடியார்களுடன் சென்று குடும்பத் தலைவர் ஒருவரைத் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்தச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்தச் சம்பவம் வவுனியா திருநாவற்குளத்தில் நேற்று முன்தினம் நடந்துள்ளது. தாக்குதலுக்கு இலக்காகியவர் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் சம்பவம் தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வட்டிக்கு பணம் வாங்கி வியாபாரம் செய்து வந்த நிலையில், வியாபாரத்தில் இழப்பு ஏற்பட்டு வியாபார நிலையம் மூடப்பட்டுள்ளது. வழங்கிய பணத்துக்கு வட்டி செலுத்தி வரும் நிலையில் கடந்த இரண்டு மாதங்களாக குறித்த நபருக்கு வட்டி கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. நேற்று அடியாள்களுடன் எனது வீட்டுக்கு வந்து வட்டிக்குக் கடன் கொடுத்த நபர் பணத்தை உடனடியாகத் தர வேண்டும் என்று மிரட்டிய தன் மீது தாக்குதல் நடத்தினார் என்று மிரட்டியதுடன் பாதிக்கப்பட்டவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (க-110)



அநுராதபுரம் மறை மாவட்டத்தில் கடந்த 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை 75ஆவது தேசிய இளையோர் ஒன்றுகூடல் ஆரம்பித்து நேற்று வரை நடைபெற்றது. இலங்கையில் உள்ள அனைத்து மறை மாவட்டங்களில் இருந்தும் நூற்றுக்கும் அதிகமான இளையோர் இந்த ஒன்றுகூடலில் கலந்து பயனடைந்தார்கள். 'இதோ ஆண்டவரின் அடிமை...' என்ற தொனிப்பொருளில் ஒன்றுகூடல் இடம்பெற்றது. (ம-222)




# 'மக்கள் செல்வி'யானார் வரலட்சுமி சரத்குமார்

நடிகை வரலட்சுமி சரத்குமார் நடிப்பில் உருவாகி உள்ள டேனி திரைப்படத்தின் முதல் சுவரொட்டி யில் அவருக்கு 'மக்கள் செல்வி' என்ற பட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.

புதுமுக இயக்குநர் சாந்தமூர்த்தி இயக்கத்தில் வரலட்சுமி சரத்குமார் நடித்துள்ள திரைப்படம் டேனி. இதில் வரலட்சுமி பொலிஸாக நடித்துள்ளார்.

இந்தப் படத்துக்கு பிஜி முத்தையா ஒளிப்பதிவு செய்துள்ளார். மேலும் இந்தப் படத்தில் யோகி பாபு, வேலராமமூர்த்தி, சயாஜி ஷிண்டே உள்ளிட்ட பல நடிகர்கள் நடித்துள்ளனர். சந்தோஷ் தயாநிதி இசையமைத்துள்ள இந்த படத்தின் முதல் சுவரொட்டி வெளியாகியுள்ளது.

இதில் வரலட்சுமியின் பெயருக்கு முன்பு 'மக்கள் செல்வி' என்ற பட்டம் இணைக்கப்பட்டுள்ளது. மக்கள் செல்வன் என்று நடிகர் விஜய் சேதுபதி அழைக்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.



# விலைகொடுத்து வாங்கமுடியாதது!

பட்டத்தை விலைகொடுத்து வாங்கலாம்!
அறிவை விலைகொடுத்து வாங்கமுடியாது!

உழைப்பை விலைகொடுத்து வாங்கலாம்!
திறமையை விலைகொடுத்து வாங்கமுடியாது!

பதவியை விலைகொடுத்து வாங்கலாம்!
மதிப்பை விலைகொடுத்து வாங்கமுடியாது!

நூலை விலைகொடுத்து வாங்கலாம்!
ஆர்வத்தை விலைகொடுத்து வாங்கமுடியாது!

மருந்தை விலைகொடுத்து வாங்கலாம்!
உடல்நலத்தை விலைகொடுத்து வாங்கமுடியாது!

கடிகாரத்தை விலைகொடுத்து வாங்கலாம்!
நேரத்தை விலைகொடுத்து வாங்கமுடியாது!

வாக்குகளை விலைகொடுத்து வாங்கலாம்!
மக்கள் நம்பிக்கையை விலைகொடுத்து வாங்க முடியாது!

புற அழகை விலைகொடுத்து வாங்கலாம்!
அக அழகை விலைகொடுத்து வாங்கமுடியாது!

இப்படி எதையும் விலைகொடுத்து வாங்கலாம்!

ஆனால் மனநிறைவை விலைகொடுத்து வாங்க முடியாது

## இது புதுசு


புதிய வகையில் தரை துடைப்பான்கள் அறிமுகமாகியுள்ளன. இவை தரையில் உள்ள அழுக்குகள் அனைத்தையும் உள்இழுத்து அகற்றிவிடக்கூடிய வகையில் அமைந்துள்ளன. இவை ஆயிரத்து 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.




ஆசைகள் இல்லாத வாழ்க்கையை நீ எப்போது தேடிச் செல்கிறாயோ அப்போதுதான் துன்பங்கள் இல்லாத வாழ்க்கை உன்னைத் தேடிவரும்















வாழ்க்கையில ஜெயிக்கணும்னா அடுத்து என்ன பண்ணலாம் என்று பார்க்கணும்.

அடுத்தவங்க என்ன பண்றாங்க என்று பார்க்கக்கூடாது.

## ஏமன் உள்நாட்டுப் போரில்

# சென்ற வருடம் மட்டும் 4,800 பேர் உயிரிழப்பு

### ஐ.நா. அதிர்ச்சித் தகவல்

சனா, மார்ச் 11

ஏமனில் நடக்கும் உள்நாட்டுப் போரில் கடந்த வருடம் மட்டும் 4 ஆயிரத்து 800 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.



இதுகுறித்து ஐ.நா. சபையின் தரப்பில், 'உலக அகதிகள் அமைப்பின் சார்பில் வியாழக்கிமை தரவொன்று வெளியிடப்பட்டது. அதில் கடந்த 2018ஆம் ஆண்டில் ஏமனில் நடக்கும் உள்நாட்டுப்போர் காரணமாக 4 ஆயிரத்து 800 பொது மக்கள் இறந்திருக்கிறார்கள். ஒவ்வொரு வாரமும் பொதுமக்களில் 100 பேர் உயிரிழந்திருக்கின்றனர் அல்லது காயமடைந்திருக்கின்றனர்' என்று தெரிவித்துள்ளது.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதி தரப்புக்கும் ஷியாப் பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் முதல் உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகிறது.

இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது. ஏமனில் நடந்து வரும் உள்நாட்டுப் போரை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை நீண்ட காலமாக பேச்சு நடந்தி வருகிறது. இந்த நிலையில் பல்வேறு பேச்சுக்களுக்குப் பிறகு போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு அரச தரப்பினரும், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் கடந்த மாதம் ஒப்புக் கொண்டனர். (ம)



## திமிங்கலத்துடன் மோதியது படகு

### 87 பேர் காயம்

டோக்கியோ, மார்ச் 11

ஜப்பானில் படகொன்று திமிங்கலத்துடன் மோதியதில் 80 பேர் காயமடைந்தனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் சொகுசு படகொன்று 125 பேருடன் நிகாடா துறைமுகத்தில் இருந்து சாடோ தீவை நோக்கி சென்று கொண்டிருந்தது. மிகவும் வேகமாக நடுக்கடலில் அந்தப் படகு சென்று கொண்டிருக்கும்போது திடீரென ஒரு திமிங்கிலத்துடன் மோதியது. இதில் 80 பேர் காயமடைந்தனர். அவர்களில் 13 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

## ட்ரம்புக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு எதிரான ஆபாச பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸின் வழக்கை லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

அமெரிக்காவில் 2016ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி நடந்த அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் ட்ரம்ப். அவர் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்தபோது, பல்வேறு பெண்கள் அவர் மீது பாலியல் குற்றச்சாட்டுகளை எழுப்பினார்கள். அப்போது ஆபாச பட நடிகையான ஸ்டார்மி டேனியல்ஸ், தன்னுடன் டிரம்ப் பல முறை உறவு வைத்துக்கொண்டார் என்றும், இதுகுறித்து வெளியே சொன்னால் அது அதிபர் தேர்தலில் அவருக்கு எதிராக திரும்பும் என்பதால், தனக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் டொலர் பணம் தந்தார் என்றும் கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். இதையடுத்து ட்ரம்புடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை செல்லாது என அறிவிக்க வேண்டும் என்று ஸ்டார்மி டேனியல்ஸ் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம். (ம)





*துருக்கியின் இஸ்தான்புல் நகரில் கடந்த 8ஆம் திகதி பன்னாட்டு மகளிர் தினத்தன்று மிகப்பெரும் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)*

## நைஜீரியாவில் லசா தாண்டவமாடுகிறது!

நைஜர், மார்ச் 11



நைஜீரியாவில் வேகமாகப் பரவிவரும் 'லசா' காய்ச்சலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 93ஆக அதிகரித்துள்ளது.

உலகின் மிக மோசமான நோய்களில் ஒன்றான 'லசா' காய்ச்சல் கடந்த ஆண்டு தொடக்கத்தில் திடீரென வேகமாக பரவி, 23 நாடுகளை தாக்கி, 171 பேரை சாவடித்துள்ளது. இந்த நோய் நைஜீரியாவில் மீண்டும் பரவி வருகிறது. நைஜீரியாவில் கடந்த இரண்டு மாதங்களாக 'லசா' காய்ச்சலின் வேகமாக பரவி வருகிறது. நைஜிரியாவின் 21 மாநிலங்களில் 'லசா' காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தேசிய மையக் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## சிரியாவில் இருந்து வெளியேற அழுத்தம் வழங்கப்படவில்லை!

### அமெரிக்க இராணுவம் தெரிவிப்பு

டமஸ்கஸ், மார்ச் 11

சிரியாவில் இருந்து நாங்கள் வெளியேற வேண்டும் என்று எந்த அழுத்தமும் வழங்கப்படவில்லை என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் ஈடுபட்டு வந்தது அமெரிக்கா. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்படும் தறுவாயில் தற்போது உள்ளது. இந்த நிலையில் சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறும் முடிவை அண்மையில் அறிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். இதற்குப் பல தரப்பிடம் இருந்தும் கண்டனங்கள் குவிந்தன. குறிப்பாக 'ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு முழுமையாகத் தோற்கடிக்கப்படாத நிலையில் அமெரிக்கா விலகுவது சரியான முடிவு அல்ல' என்று பிரிட்டன் குறிப்பிட்டது. அமெரிக்காவின் விலகலுக்கு முக்கிய காரணம் 'சிரியாவில் இருந்து விலகுமாறு சிரியாவாலும் ரஷ்யாவாலும் வழங்கப்பட்ட அழுத்தமே' என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தமக்கு எவ்வாறான அழுத்தமும் வழங்கப்படவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதுகுறித்து மத்திய கிழக்கு நர்டுகளில் அமெரிக்கப் படைகளை மேற்பார்வையிடும் படைத் தலைவர் ஜோசப், 'சிரியாவிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என்று எந்த அழுத்தமும் எங்களுக்குத் தரப்படவில்லை. ஐ.எஸ். அமைப்பைத் தோல்வியடையச் செய்து வெளியேறுவது எங்கள் இலக்கு. இதில் எங்களது படையின் பாதுகாப்பையும் நாங்கள் உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்' -என்றார். (ம)

# வடகொரியா அணுஆயுதச் சோதனை நடத்தினால் ஏமாற்றம் அடைவோம்

## கவலை வெளியிடுகிறார் ட்ரம்ப்

வோஷிங்டன்.மார்ச்.11

வடகொரியா அணுஆயுதச் சோதனை நடத்தினால் நாங்கள் ஏமாற்றம் அடைவோம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். வடகொரியா தன்னுடைய ரொக்கெட் ஏவுதளத்தைச் சீரமைத்து வருவதாகச் செய்திகள் வெளியாகியிருந்த நிலையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.



"எங்களுக்கு இடையே உள்ள புரிதலை மீறி வடகொரிய அதிபர் கிம் எதிர்வினையாக எதாவது செய்தால் நிச்சயம் ஆச்சரியப்படுப்வேன். நிச்சயம் வடகொரியா அணுஆயுதச் சோதனைகளை நடத்தினால் நான் மிகுந்த ஏமாற்றம் அடைவேன். என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மேலும் குறிப்பிட்டார்.

**பின்னணி**

வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நீடித்த முரண்போக்கு குறித்த நாட்டுத் தலைவர்கள் இருவரும் கடந்த வருட முடிவில் சிங்கப்பூரில் சந்தித்துப் பேசியதன் மூலம் இணக்க நிலைக்கு வந்தது. ட்ரம்பும் - கிம்மும் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களுக்கு இணங்க அணுஆயுதம் மற்றும் ஏவுகணைச் சோதனையை நிறுத்தியது வடகொரியா. அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று முக்கிய அணு ஆயுத உலைகள், ஏவுகணைத் தளங்கள் உள்ளிட்டவற்றைப் பன்னாட்டுக் கண்காணிப்பாளர்களின் முன்னிலையில் வடகொரியா மூடியது. அதற்குப் பிரதிபலனாகத் தங்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை முழுமையாக நீக்க வேண்டும் என வடகொரியா எதிர்பார்க்கிறது. இருப்பினும் வடகொரியா அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிட்டு, கொரியத் தீபகற்பத்தை அணுஆயுதமற்ற பிரதேசமாக மாற்ற வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்துகிறது. இதனால் கடந்த மாத இறுதியில் வியட்நாமின் ஹனோய் நகரில் ட்ரம்பும் கிம்மும் திரும்பவும் சந்தித்துப் பேசினர். எதிர்பார்க்கப்பட்ட உடன்பாடுகள் எட்டப்படாமல் பேச்சுக்கள் தோல்வியடைந்தன. வடகொரியா அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிடாத வரை அந்த நாட்டுக்கு எதிர்காலம் கிடையாது என ட்ரம்ப் கூறினார். தென் கொரியா - அமெரிக்கச் சிப்பாய்கள் இணைந்த போர்ப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் அதிருப்தி அடைந்த வடகொரியா இனிப் பேச்சுகள் நடந்தாலும், அணு ஆயுத விவகாரத்தில் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தது.

---

## மலாவியில் கொட்டுகிறது மழை வெள்ளத்தால் 23 பேர் சாவு


லிலொங்வ்வி.மார்ச்.11

தென்கிழக்கு ஆபிரிக்க நாடான மலாவியில் கடந்த சில தினங்களாக பலத்த காற்றுடன் இடைவிடாத கடும் மழை பெய்து வருகிறது. இந்தத் தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை 23 பேர் சாவடைந்தனர்.

ஆறுகள் பலவும் கட்டுடைத்து நீரை வெளியேற்றியுள்ளன. தாழ்வான தரைப் பகுதிகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. சுமார் 1 லட்சம் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு முக்கிய பாலங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து பொதுமக்கள் மீட்கப்பட்டு அரசு அமைத்துள்ள முகாம்க ளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

11 மாவட்டங்களில் அதிக அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த மழை வெள்ளத்தில் சிக்கி 23 பேர் சாவடைந்துள்ளனர் என்றும் 11 பேரைக் காணவில்லை என்றும் முதற் கட்டத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அங்கு மழை நீடிக்கும் அபாயம் உள்ளதால் பாதிப்புகள் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.





20 ஆண்டுகால அதிபரை எதிர்த்து

## அல்ஜீரியாவில் வலுக்கிறது போராட்டம்



அல்ஜீயர்ஸ்.மார்ச்.11

ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவின் அதிபர் அப்தலசீஸ் பூத்தவ்ப்லீக்காவுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். தலைநகர் அல்ஜீரஸ் மற்றும் பிற நகரங்களில் பெரியளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். அல்ஜீரியாவில் தற்போதைய அதிபராக இருக்கும் அப்தலசீஸ் பூத்தவ்ப்லீக்காவுக்கு வயது 82. வயது மூப்பின் காரணமாகவும், பக்கவாதம் ஏற்பட்டதன் காரணமாகவும் அவரைப் பொது இடங்களில் பார்ப்பது அரிதாக உள்ளது. ஏற்கனவே, நான்கு முறை அதிபராகப் பதவி வகித்துள்ள அவர், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி நடைபெற்றவுள்ள தேர்தலில் ஐந்தாவது முறையாகப் போட்டியிடக் கூடாது என்பதை வலியுறுத்தியே மக்கள் கடந்த சில நாள்களாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். சுவிட்சர்லாந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அதிபர் அப்தலசீஸ் பூத்தப்லீக்கா, கடந்த 20 ஆண்டுகளாக அல்ஜீரியாவை ஆண்டு வருகிறார். இந்தப் போராட்டங்கள் நாட்டைக் குழப்பங்களுக்கு இட்டுச்செல்லும் என்று அவர் எச்சரித்திருக்கிறார். இனி வரும் தேர்தலில் தான் வெற்றிப்பெற்றால் முழுப் பதவிக் காலமும் பதவியில் இருக்கமாட்டேன் என்றும், புதிய தேர்தலை நடத்துவதற்கான பேச்சுகள் நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

---



## இன்றைய நாள்

**மேடம்:** வெகுநாள் திட்மிட்ட முக்கியமான செயல் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உபரி வருமானம் கிடைக்கும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

**இடபம்:** அணுகுமுறை எளிமையாக இருக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அக்கறையுடன் பணிபுரிவீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** நண்பரின் ஆலோசனை நன்மை பெற உதவும். தொழில், வியாபாரத்தில் இலக்கு எளிதாக நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்ப பிரச்சனையில் சாதகமான தீர்வு கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு செய்வீர்கள்.

**சிங்கம்:** முக்கிய செயல் தாமதமாகலாம். தொழில், வியாபாரம் செழிக்க நண்பரின் ஆலோசனை உதவும். குறைந்த அளவில் பணம் கிடைக்கும்.

**கன்னி:** புதியவர்கள் உதவி கேட்பர். இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிகம் பணிபுரிவீர்கள். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும்.

**துலாம்:** செயல்களை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி அடைந்து நம்பிக்கையைத் தரும். தாராள பணவரவில் கொஞ்சம் அறப்பணி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** பலரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். தாராள பணவரவில் சேமிப்பு கூடும். காணாமல் தேடிய பொருள் அதிர்ஷ்டவசமாக கிடைக்கும்.

**தனுசு:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். செலவில் சிக்கனம் வேண்டும்.

**மகரம்:** நன்கு பழகியவர்களிடமும் பேசுவதில் நிதானம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் அனுகூலங்களை பாதுகாப்பது நல்லது. மிதமான அளவில் பணவரவு இருக்கும்.

**கும்பம்:** எதிரி இடம் மாறிப்போகிற நன்னிலை உண்டு. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரம் வளர சில மாற்றம் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும்.



# சென்.ஹென்றிஸ் அணிக்கு மகுடம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய வடக்கு மாகாண பாடசாலைகளின் 12 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான மைலோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் அண்மை யில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. 1:0 என்ற கோல்கணக்கில் ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## நவிண்டி கலைமதி வி.க. இறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 11

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியைசமநிலைதகர்ப்பு உதைமூலம் வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது நவிண்டில் கலைமதி விளையாட்டு க்கழகம்.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் அரையிறுதி ஆட்டம் நேற்று இடம்பெற்றது. இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில், அந்த அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

கலைமதி அணி ஆட்டம் ஆரம்பித்த 15ஆவது நிமிடத்தில் முதலாவது கோலை விஜிதரன் ஊடாகப் பதிவு செய்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இமையாணன் அணிக்கு தண்டனை உதை கிடைத்தது. அதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி கோலைப் பதிவு செய்தது அந்த அணி. ஆட்டம் சமநிலையில் நிறைவுக்கு வந்தது. வெற்றியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் நவிண்டில் கலைமதி அணி வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது. (ஒ.23)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

**நாமகள் கழக கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் அணியை எதிர்த்து சில்வெஸ்ரார் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இட்ம்பெறும் ஆட்டத்தில் சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கலைவாணியின் கால்பந்தாட்டம்**

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. (ம-23)

## வட்டுக்கோட்டை வி.கழகம் அசத்தலான வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், மார்ச் 11

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்ட நேரமுடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை அணி வெற்றிபெற்றது. (ம-23)

## பாடும்மீன் வென்றது!

யாழ்ப்பாணம், மார்ச் 11

அரியாலையின் 100ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. 6:0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது. அந்த அணியின் சார்பில் விசோத் மூன்று கோல்களையும், கெயின்ஸ், சேயன், டயினியஸ் ஆகியோர் தலா ஒரு கோலையும் பதிவுசெய்தனர். (ம-23)

## தெல்லிப்பழை மகாஜனா கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், மார்ச் 11

இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய பாடசாலைகளின் 12 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான மைலோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பெண்கள் அணி கிண்ணம் வென்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் மகளிர் கல்லூரி பெண்கள் அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பெண்கள் அணி வெற்றிபெற்றது. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கீரிமலை நகுலேஸ்வரா கல்லூரி பெண்கள் அணியை எதிர்த்து வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை பெண்கள் அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை பெண்கள் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## ஆஸி.- பாகிஸ்தான் ஒருநாள் போட்டி; பாகிஸ்தான் அணி அறிவிப்பு

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் எதிர் வரும் 22ஆம் திகதி முதல் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெறவுள்ளது. இதற்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தென்னாபிரிக்கா தொடரின் போது அந்த அணியின் வீரர் பெலுக்வாயோவை இனவெறி தொடர்பான கருத்துக்களால் பேசி சர்ச்சையில் சிக்கிய பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பிராஸுக்கு 4 போட்டிகளில் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் இடம்பெறவில்லை.

மேலும், முன்னணி வீரர்களான பாபர் ஆசம், ஷாஹீன் அப்ரிடி, பகர் சமான், சதாப் கான், ஹசன் அலி ஆகியோருக்கு உலகக் கிண்ணத்தை கருத்தில் கொண்டு ஓய்வளிக்கப்பட்டுள் ளது.

பாகிஸ்தான் அணி வீரர்களின் விவரம்:

சொயிப் மாலிக் (அணித் தலைவர்) அபிட் அலி, பஹீம் அஷ்ரப், ஹரிஸ் சோஹைல், இமாத் வாசிம், இமாம் உல் ஹக், ஜுனைத் கான், முகமது அப்பாஸ், முகமது அமிர், முகமது ஹஸ்னைன், முகமது ரிஸ்வான், சாத் அலி, உமர் அக்மல், உஸ்மான் ஷின்வரி, யாசிர் ஷா, ஷான் மசூத் ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.




# 45 ஓட்டங்களில் சுருண்டது மேற்கிந்தியத்தீவுகள் அணி

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் மூன்று ரி-20 போட்டிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இரண்டாவது ரி-20 போட்டியில் இங்கிலாந்து அணி இலகுவாக மேற்கிந்தியத் தீவுகள் அணியை 45 ஓட்டங்களுக்குள் சுருட்டி 137 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2:0 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் இங்கிலாந்து அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கலிஸ், பிறிஸ்ரோ களமிறங்கினர். அணி 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பிறிஸ்ரோ 12 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இணைந்தார் ரூட். அணி 32 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. ஐந்தாவது இலக்குக்காக 83 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அதிகபட்சமாக பில்லிங்ஸ் 87 ஓட்டங்களையும், ரூட் 55 ஓட்டங்களையும் பெற்றனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் அலின் 2 இலக்குகளையும், காட்ரல், பிரித்வைட், மெக்காய் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகளின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக கிறிஸ் கெய்ல், ஹோப் களமிறங்கினர். அணி 12 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கெய்ல் 5 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அணி 20 ஓட்டங்களுக்குள் 5 இலக்குகளை இழந்து பரிதவித்தது. அதிகபட்ச ஓட்டமாக ஹட்மெயர் 10 ஓட்டங்களையும், பிரித்வைட் 10 ஓட்டங்களையுமே பெற்றனர். அணி 11.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களை மாத்திரமே பெற்று படுதோல்வியைத் தழுவியது.


பந்து வீச்சில் ஜோர்டன் 4 இலக்குகளையும், வில்லி, ரசிட், ப்ளுங்கெட் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணி வீரர் பில்லிங் தெரிவு செய்யப்பட்டார்.

## இரண்டாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்த மே.இ.தீவுகள்

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இரண்டாவது ரி-20 போட்டியில் இங்கிலாந்து அணி 45 ஓட்டங்களுக்குள் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

பன்னாட்டு ரி-20 போட்டியில் இது இரண்டாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும்.

2014ஆம் ஆண்டு இலங்கை - நெதர்லாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்ற ரி-20 போட்டியில் இலங்கை அணி 39 ஓட்டங்களுக்குள் நெதர்லாந்து அணியை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இந்திய கிரிக்கெட்டில் புஜாராவால் சர்ச்சை!

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒப்பந்தத்தில் டெஸ்ட் வீரர் புஜாராவுக்கு ஏ பிளஸ் பிரிவு ஊதிய ஒப்பந்தம் வழங்கப்படாதமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊதிய ஒப்பந்தம் அண்மையில் புதுப்பிக்கப்பட்டது. ஏ பிளஸ் பிரிவில் கோக்லி, ரோகித், பும்ரா ஆகியோர் மட்டுமே இடம்பிடித்தனர். புஜாராவுக்கு ஏ பிரிவிலேயே இடம் கிடைத்தது. இதையடுத்து டெஸ்ட் ஆட்டங்களில் இந்திய அணியின் தூணாகச் செயற்பட்டுவரும் புஜாராவுக்கு ஏ பிளஸ் பிரிவில் இடம்கொடுக்காதமைக்கு பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ம)



## பங்களாதேஷ் - நியூசிலாந்து இடையிலான டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிய வாய்ப்பு

பங்களாதேஷ் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைவதற்கு அதிக வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நியூசிலாந்தின் வெலிங்டன் மைதானத்தில் கடந்த 8ஆம் திகதி முதல் நாளை வரை இந்த ஆட்டம் இடம்பெறுகின்றது. முதலிரு நாள்களும் கடும் மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது. மூன்றாம் நாளான நேற்று நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 211 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக தமீம் இக்பால் 74 ஓட்டங்களைச் சேர்த்தார்.

பந்துவீச்சில் வாக்நெர் 4 இலக்குகளையும், போல்ட் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 2 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நாள் முடிவுக்கு வந்தது.

மூன்று நாள்கள் முடிந்துவிட்ட போதிலும் இன்னமும் ஓர் இன்னிங்ஸ்கூட முழுமை பெறவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடியவே அதிக வாய்ப்பு உண்டு என்று கருதப்படுகிறது. (ம)

## காலிறுதியில் சாய்னா தோல்வி

இங்கிலாந்து பகிரங்க பூப்பந்தாட்டத் தொடர் பர்மிங்காமில் இடம்பெற்று வருகின்றது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவைச் சேர்ந்த சாய்னா நேவால் தாய்வானைச் சேர்ந்த முதன் நிலை வீராங்கனை தாய் சூ யிங்கை எதிர்கொண்டார்.

இதில் சாய்னா நேவால் 15:21, 19:21 என்ற நேர்செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார். சாய்னாவும், தாய் சூ யிங்கும் 20 முறை நேருக்கு நேர் மோதியுள்ளனர். இதில் சாய்னா ஐந்து முறை மட்டுமே வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 550
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.10
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 50,611,905/-
வெற்றி இலக்கங்கள்
09 41 57 60 M
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AKஎன டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 10.03.2019 | வெற்றி வாரம் 2474 | வர்ணம் ஊதா
துலாம்
வெற்றி இலக்கங்கள் 12 21 23 59
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 517, 220/=
12.03.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 937
சீட்டிழுப்பு திகதி 2019.03.09 சனிக்கிழமை
H 22 32 38 40
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

MBA
Leeds Trinity University
PIBT
UGC APPROVED

Admissions are open for March Intake
ENTRY REQUIREMENTS
Bachelors Degree + 2 years of Work Experience
Relevant Professional Qualification +2 years of Work Experience
Experienced entrepreneurs or individuals
holding senior management positions (Conditions Applied)
For more details : 0777570038
Monthly payment plans available
Most affordable world class MBA programme offered in Jaffna
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
021 222 8060 | 071 777 4666
info@iis.edu.lk | www.iis.edu.lk

### கிரிக்கெட் ஆட்டத்தில் இராணுவத் தொப்பி

# இந்திய அணிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாக். கடும்பிடி

## இல்லாவிட்டால் உலகக்கிண்ணத் தொடரில் கறுப்பு பட்டி அணிவோம் என்று மிரட்டல்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய அணியினர் இராணுவத் தொப்பி அணிந்து விளையாடியமைக்கு பாகிஸ்தான் தனது கடும் கண்டனத்தைப் பதிவுசெய்தது. இந்தியாவுக்கு எதிராக பன்னாட்டுக் கிரிக்கெட் சபை கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் அணியினர் கையில் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடுவார்கள் என்றும் பாகிஸ்தான் வலியுறுத்தியது.

புல்வாமா தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும், நாட்டு மக்கள் தேசிய பாதுகாப்புத் துறைக்கு நிதி வழங்குவதை ஊக்குவிக்கும் வகையிலும் இந்தத் தொப்பியை அணிந்து களமிறங்கியதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு உலகெங்கும் இருந்து கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பாகிஸ்தான் அமைச்சர்கள் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் அயலுறவுத்துறை அமைச்சர் இது குறித்துத் தெரிவிக்கையில்; 'இந்த விடயத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முறைப்பாடு அளிக்கும் முன், பன்னாட்டுக் கிரிக்கெட் சபை இந்திய அணி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' - என்றார்.

பாகிஸ்தானின் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் தெரிவிக்கையில்; 'இந்திய அணியின் செயல் சாதாரணமானது அல்ல. இது கிரிக்கெட் தானே என்று விட்டுவிட முடியாது. இதுபோன்ற செயல்களை இந்திய அணி நிறுத்திக்கொள்ளாவிட்டால், காஷ்மீரில் இந்திய இராணுவம் செய்யும் அட்டூழியத்தை கண்டித்தும், உலகின் பார்வையைதிருப்பும் வகையிலும் உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் அணி கையில் கறுப்பு பட்டியை அணிந்து விளையாடும்- என்றார்.

வாடகைக்கு
A9 வீதி, கிளிநொச்சி மக்கள் வங்கிக்கு அருகாமையில் உள்ள 50 அடி அகலமும் 100 அடி நீளமும் உடைய கட்டடம் வாடகைக்கு உண்டு.
(M.M.B MILL)
(CS 23552) (4.17)
021 222 1971/077 538 0981

SAAMSON Experts in English Training
இன் 3 மாத சனி, ஞாயிறு ஆங்கிலப் பயிற்சிநெறி
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 16.03.2019 சனி
பிரிவு 01 : காலை 08-10 பிரிவு 02 : மாலை 03-05
மூன்றுமாத பயிற்சிக்கட்டணம் ரூபா 3000 மட்டுமே!
வாரநாள் (செவ்வாய் - வியாழன்) பிரிவு காலை 08.30 - 10.00
இளைஞர் யுவதிகள், தொழில்புரிவோர், ஆங்கிலம்பேசவிரும்புவோர் இணையமுடியும்
SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 077 621 4567 021 222 4282

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 417
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.03.10
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 116,408,988/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
F 12 30 38 44
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KSஎன டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

தென்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை
ஆரம்பம் 22.04.2019 யாத்திரீகர் 10 நாள்கள் 16
தரிசிக்கும் இடங்கள் :- மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காளகஸ்திரி, திருவெண்ணா மலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மதுரை மீனாட்சி, மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாகுமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் மைசூர் பலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் நாமக்கல் ஆஞ்சநேயர், கொல்லிமலையும் காணலாம்.
தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.
மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)
தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
# 59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
T.P -077 768 0102, 077 736 2154
E-mail: sriranganathan2601@gmail.com/ www.sridevipilgrims.com/f:sridevi ranganathanthuraiappa

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.